


33ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059 www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca www.tamilvanakkam.com




நதி: 33 | பாலம்: 01 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JANUARY 01, 2023

# புத்தாண்டில் கனடியப் பொருளாதாரம்!

கனடாவின் பொருளாதார வளர்ச்சி பற்றி 2023ஆம் ஆண்டில் அவதானமாக இருக்க வேண்டுமேயொழிய எச்சரிக்கையடையத் தேவையில்லை என வணிக மேம்பாட்டு நிறுவனம் (BDC) தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. 2022ஆம் ஆண்டு நிறைவடையும்போது எல்லோரிடமும் இரண்டு கேள்விகள் இருந்தன. அவை பெரும் தொற்று நோய்ப்பரவல் முடிவடைந்து விட்டதா? நாங்கள் ஒரு பொருளாதார மந்தநிலைக்குள் போகப் போகிறோமா?

முதலாவது கேள்விக்கு எம்மால் திட்டவட்டமாகப் பதில் கூற முடியா விட்டாலும், இரண்டாவது கேள்விக்கு நாம் இலகுவில் கனடா இன்னமும் ஒரு பொருளாதார மந்தநிலைக்குச் செல்லவில்லை எனக் கூறலாம். 2022ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் கனடாவின் பொருளாதார வளர்ச்சி மிகவும் குறைவாக இருந்தாலும் 2023ஆம் ஆண்டில் கனடாவில் ஒரு பொருளாதார மந்தநிலை ஏற்படுவதைத் தடுக்கக்கூடிய நிலையிலேயே கனடாவின் பொருளாதார வளர்ச்சி இருக்கிறது.

கனடியப் பொருளாதார நிலையைத் தெரிவிக்கும் புள்ளி விபரங்களான: கனடாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சி 0.5% ஆகவும், கனடிய வங்கியின் வட்டி 4.5% ஆகவும் மற்றும் தொழிலாளர் சம்பள உயர்வு 4%ஆகவும் 2023ஆம் ஆண்டில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கோவிட்-19 பெரும்தொற்று நோய்ப் பரவலிற்கு முன்னர் தொழிலாளர் சம்பள உயர்வு 2.7%ஆக இருந்தது குறிப்பிடத்தக்கது. 2022ஆம் ஆண்டு உலகளாவிய ரீதியிலேயே பொருளாதார வளர்ச்சிக்குத் திருப்புமுனை ஆண்டாக இருந்தது.

உக்ரைனில் உருவான போரால் ரஷ்யாவின்மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் மற்றும் சீனாவில் ஏற்பட்ட குறைந்த பொருளாதார வளர்ச்சி கடந்த 12 மாதங்களா உலகளாவிய பொருளாதார வளர்ச்சியைப் பாதித்து வந்தன. ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி உக்ரைனில் உருவான போரால் மிகவும் பாதிக்கப்பட்டது. அத்துடன் அவர்கள் தற்போது மிகவும் பாரிய எரிசக்தி நெருக்கடிக்குள் உள்ளாகியிருக்கின்றனர்.



அமெரிக்காவில் வட்டி வீத உயர்வாலும், பணவீக்கத்தாலும் பங்குச் சந்தையில் விலைச்சரிவு ஏற்பட்டாலும், அமெரிக்காவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சி 2022ஆம் ஆண்டின் முற்பகுதியில் குறைவாக இருந்து பிற்பகுதியில் வளர்ச்சி அடையத் தொடங்கியுள்ளது.

மத்திய வங்கிகள் நாட்டின் பணவீக்கத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வட்டி வீதத்தை உயர்த்துவது நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை கட்டுப்படுத்துகிறது.


இவ்வாறான உலகளாவிய பொருளாதார சவால்களை கனடியப் பொருளாதார வளர்ச்சி திறம்பட எதிர்கொண்டு வந்துள்ளது. கனடாவில் விரைவில் வேலை வாய்ப்புகள் மீண்டும் உருவாக்கப் பட்டுள்ளன. மக்களின் சேமிப்பு அதிகரித்துள்ளது. தொழில் நிறுவனங்களில் மக்களின் முதலீடு அதிகரித்துள்ளது. கோவிட்-19 பெரும் தொற்றுநோய்ப் பரவலால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டவுடன் மக்களுக்கு சேவை செய்யும் பணிகளை வழங்கும் நிறுவனங்கள் மீண்டும் தமது தொழில்களை ஆரம்பித்துள்ளன. இவற்றால் கனடாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 2022ஆம் ஆண்டில் 3.5%ஆக இருந்தது எனப் பொருளாதார நிபுணர் தெரிவித்துள்ளனர்.

கனடாவில் 2023இல் பொருளாதார மந்தநிலை ஏற்படாவிட்டாலும் கனடாவின் பொருளாதார வளர்ச்சி 2023இல் குறைவாகவே இருக்கும் எனப் பொருளாதார நிபுணர் கருத்துத் தெரிவித்துள்ளனர். கனடிய வங்கி கனடாவில் பணவீக்கத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர மிகவும் இறுக்கமான கொள்கையைக் கடைப்பிடிப்பதே கனடாவில் பொருளாதார வளர்ச்சி குறைவதற்கான ஒரு காரணம்.

தொடர்ச்சி 07 பக்கம்

எமது வாசகர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் 2023 ஆம் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்



























For All Your Private Mortgage Needs

8T Capital

Mortgage Administration # 13073



AYNGKARAN SIVANANTHAM

Business Development Manager

Mobile: (647) 670-0320

Email: ayngkaran@8twelve.capital

Website: www.8Twelve.capital

* NOT Income Driven
* NOT Credit Driven
* Equity Based Lender
* Common Sense Lending Approach
* Interest Only Payments
* Flexible Terms
* Commitment issued less than 24 Hours
* Fast Funding within 2 to 3 business days
* 1st Mortgages, 2nd Mortgages, Debt Consolidation & Refinances
* Construction & Contractor Programs
* Flexible & Creative
* No Hidden Fees or Bait and Switch

***Available 7 days a week***



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# ஜனாதிபதி ரணில் யாழ்ப்பாணத்தில் வைத்து தீர்வை வெளியிடுவாரா?




காணிகளை விடுவிப்பதற்கும் மற்றும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கும் உடனடி நடவடிக்கை எடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் தமிழ் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையில் தொடர் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வரும் நிலையில் கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

தேசிய நல்லிணக்கத்தின் ஊடாக இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொது இணக்கப்பாட்டிற்கு வரும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த 14ஆம் திகதி சர்வகட்சி மாநாட்டைக் கூட்டியிருந்தார். ஜனாதிபதிக்கும் தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான மற்றுமொரு கலந்துரையாடல் கடந்த 21ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே ஜனாதிபதி இவ்வாறான வாக்குறுதிகளை வழங்கியுள்ளதாக சுமந்திரன் தெரிவித்துள்ளார். மேலும், அன்று நடைபெற்ற கலந்துரையாடலின் போது, தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான தீர்மானங்களை எதிர்வரும் தைப்பொங்கல் தினத்திற்கு முன்னர் உறுதி செய்துகொள்வது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக ஜனவரி மாதம் 10ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதிவரை தொடர்ந்து நான்கு நாட்கள் பேச்சுக்களை நடத்தி தீர்மானங்களை எட்டுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் கைதிகள் தொடர்பில், பதினான்கு கைதிகள் குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் உள்ளனர். எஞ்சியோர் வழக்குகளை எதிர்கொண்டுள்ளனர். அவர்களுக்கு எதிரான வழக்குகளை விரைந்து முடிப்பதற்கு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. தண்டனை தீர்ப்பு பெற்ற 14 பேரில் ஐவரை உடனடியாக மன்னிப்பின் கீழ் விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஏனைய ஒன்பது பேருடைய விடயங்களிலும் சில நடைமுறை ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு, அவர்களும் பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்கப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்குகளை எதிர்கொண்டுள்ள அரசியல் கைதிகள் விடயத்தில் நீதிமன்றம் மூலம் அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கும் இராணுவத் தரப்பிற்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற பேச்சுக்களை அடுத்து கணிசமான காணிகளை விடுவிப்பதற்கான இணக்கம் இராணுவத் தரப்பினால் வழங்கப்பட்டிருப்பதாகக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. 13ஆவது திருத்தத்தில் கூறப்பட்ட அதிகாரப் பகிர்வு விடயங்களை முழு அளவில் நடைமுறைப்படுத்துவதற்கு, அதற்குப் பின்னர் கொண்டுவரப்பட்ட எந்தெந்த சட்டங்களில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பது தொடர்பில் விவரமான பட்டியல் ஒன்றை அரச தரப்பிடம் சுமந்திரன் கையளித்துள்ளார்.

13ஆவது திருத்தத்தில் உள்ள காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் ஆகியவற்றை முழு அளவில் நடைமுறைப்படுத்துவதற்கான முடிவு உடனடியாக எட்டப்பட வேண்டும் என்ற சம்பந்தனின் வலியுறுத்தல் அன்றைய கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இறுதித் தீர்விற்கான உடன்பாடுகளை தைப்பொங்கலுக்கு முன்னர் எட்டினால், அதை ஒட்டிய சில விடயங்கள் தவறவிடப்பட்டிருந்தாலும் அவற்றை பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர் இறுதி செய்து, நாட்டின் 75ஆவது சுதந்திர தின சமயத்தில் தீர்விற்கான இறுதி முடிவுகள் முழுமையாக எட்டப்பட்டிருக்கும் என்றும் நம்பிக்கை வெளியிடப்பட்டது.

இதேவேளை, இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தமிழ் மக்களுக்கு சாதகமான சூழல் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்திருப்பதையும்



இங்கு குறிப்பிட வேண்டும். தீர்வு விடயத்தில் பெரும்பான்மை இனக் கட்சிகள் எதிர்ப்பினை வெளியிடவில்லை என்றும் விக்னேஸ்வரன் கூறினார்.

ஐ.நா. உட்பட உலக நாடுகள் கொடுக்கும் நெருக்கடி காரணமாக ஜனாதிபதி இந்த நடவடிக்கையை எடுத்திருக்கலாம் என்றும் தெரிவித்த விக்னேஸ்வரன் எவ்வாறாயினும், தமிழருக்கான தீர்வு குறித்த விடயத்தில் சகல கட்சிகளையும் ஒன்றிணைத்து ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பதால் நியாயமான தீர்வு கிடைக்கலாம் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையின் போது இந்தியாவின் மத்தியஸ்தம் அல்லது மேற்பார்வை அவசியம் என்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் மற்றும் விக்னேஸ்வரன், சுரேஸ் பிரேமச்சந்திரன் முதலானோர் வலியுறுத்த ஆரம்பித்துள்ள நிலையில் அது தொடர்பில் இரா. இசம்பந்தன் விளக்கமளித்துள்ளார். தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் இந்தியாவின் வகிபாகம் மிகவும் முக்கியமானது என்றும் இலங்கையில் தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் அத்தனை விடயங்களையும் இந்தியா நன்கு அறிந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக, 1983ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்களின் விவகாரம் சம்பந்தமாக இந்தியா விசேடமாக கரிசனை கொண்டிருக்கின்றது. இதன் காரணமாகவே 1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதன் பின்னரான காலத்திலும், தமிழ் மக்களின் விவகாரங்களில் இந்தியா முழுமையான பங்களிப்பினை செய்தே வந்துள்ளது. இந்நிலையில் தற்போது இந்தியாவின் பங்களிப்பினை புதிதாகக் கோர வேண்டியதில்லை என்றும் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பங்குபற்றுதலோடு தேசிய ரீதியிலான 75ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டம் யாழ்ப்பாண கலாச்சார மத்திய நிலையத்தில் இடம்பெற உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள கலாச்சார மத்திய நிலையத்திலேயே சுதந்திர விழா ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த விழாவில் வைத்து இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான தீர்மானத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெளியிடுவாரா?

இலங்கையில் மாறி மாறி வந்த அரசாங்கங்களால் நீண்ட காலமாக ஏமாற்றப்பட்டு வந்த தமிழ் மக்களுக்கு சந்தேகங்களும் குழப்பங்களுமே இப்போது ஏற்பட்டுள்ளது.

விளம்பரம்
VLAMBARAM
33ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும். விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

## மிரளவைக்கும்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்த கோல்களை அடித்துள்ளார். இதன் மூலம் பிரேசில் ஜாம்பவான் பீலேவை முந்தி 4-வது இடத்தை பிடித்தார்.

பீலே 12 கோல்கள் அடித்துள்ளார். குளுாஸ் (ஜெர்மனி) 16 கோல்களுடன் முதல் இடத்திலும், ரொனால்டோ (பிரேசில்) 15 கோல்களுடன் 2-வது இடத்திலும், ஜெரார்டு முல்லா (மேற்கு ஜெர்மன்) 14 கோல்களுடன் 3-வது இடத்திலும் உள்ளனர். பிரான்சை சேர்ந்த பாண்டைனுடன் இணைந்து மெஸ்சி 4-வது இடத்தில் உள்ளார். இருவரும் தலா 13 கோல்கள் அடித்துள்ளனர். உலக கோப்பையில் அதிக போட்டிகளில் விளையாடிய வீரர் என்ற சாதனையையும் மெஸ்சி படைத்தார். அவர் 26 ஆட்டத்தில் ஆடி லோத்தர் மேத்யூசை (ஜெர்மனி) முந்தினார். மேத்யூஸ் 25 ஆட்டங்களில் விளையாடியதே சாதனையாக இருந்தது.

1962ஆம் ஆண்டுக்கு பிறகு உலகக் கோப்பையை அடுத்தடுத்து எந்த அணியும் வென்றதில்லை. அந்த பெருமையை பெறும் பிரான்சின் முயற்சி மயிரிழையில் நழுவிப்போனது.

உலக கோப்பையை வென்றதன் மூலம் மெஸ்சி கால்பந்தில் அனைத்து கால கட்டத்திலும் தான் சிறந்த வீரர்களில் ஒருவர் என்பதை நிரூபித்து காட்டியுள்ளார்

# உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் பிற்போடப்படுமா?

- விகிர்தன் -

எதிர்வரும் ஜனவரி 10ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் கலைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் எதிர்வரும் ஜனவரி மாதம் 5ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரையான காலப் பகுதியில் கலைக்கப்படும் என்று நாடாளு மன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்ட பின்னர் 14 நாட்களுக்குள் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறுவதில் மாற்றம் இல்லை என்பதாகவே தெரிவிக்கின்றது. ஆயினும், தேர்தலை எப்படியேனும் பிற்போடுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்து வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தி வருகின்றன. மக்களின் ஆணை ஆளும் தரப்பினருக்குக் கிடைக்காமல் போகும் என்ற அச்சத்தினால் அரசாங்கம் தேர்தலை பிற்போட முயற்சிக்கின்றது என எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட்டால் ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்து அரசாங்கத்திற்கு எதிராக மாபெரும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தேர்தலை பிற்போட வேண்டிய தேவை ஆணைக்குழுவிற்குக் கிடையாது எனத் தேர்தல்கள் ஆணைக்குழு கருத்து வெளியிட்டுள்ளது. தேர்தல் சட்டத்தின் பிரகாரம் தேர்தலுக்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் ஒரு சிறிய தேர்தலாகக் கருத்தப்பட்டாலும், இலங்கையின் இன்றைய அரசியல் சூழ்நிலையில் மிக முக்கியமான தேர்தலாகவே பார்க்கப்படுகின்றது. இன்றைய குழப்பமான நிலையில் மக்களின் மனநிலை எவ்வாறாக இருக்கப்போகின்றது என்பதை வெளிப்படுத்தும் ஒரு தேர்தலாகவே உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் அமையப் போகின்றது. இந்தத் தேர்தலை எதிர்கொள்வதற்காக பிரதான கட்சிகள் யாவும் கூட்டணி அமைத்துக் களமிறங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. கூட்டணியாக இல்லாமல் தனியொரு கட்சியாக இனி வரும் தேர்தல்களில் போட்டியிட முடியாது என்கின்ற கருத்திலேயே எதிர்க்கட்சிகள் இருப்பதாகத் தெரிகின்றது.



இந்நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டணி அமைக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஆளும் தரப்பான பொதுஜன பெரமுனவின் ஆதரவுடனேயே ஜனாதிபதி பதவியில் தொடர்வதனால் பொதுஜனபெரமுனவுடன் ஒரு தேர்தல் கூட்டணியை அமைத்துக் களமிறங்கலாம் என்கின்ற ஊகங்களும் வெளிவருகின்றன. ஆனால், அதனை ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் விரும்ப மாட்டார்கள். ரணில் விக்ரமசிங்கவும் இதனை வேறு வழியில் கையாள்வார் என்றே நம்பலாம்.

அதாவது, பொதுஜனபெரமுனவிற்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைப் பயன்படுத்தி, பொதுஜனபெரமுனவில் பிளவுகளை ஏற்படுத்தி அவ்வாறு அக்கட்சியிலிருந்து வெளியே வரும் குழுவினரோடு ஐக்கிய தேசியக் கட்சி கூட்டணி அமைக்கலாம்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்குக் காலம் தேவைப்படுகின்றது. இதனால் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் பிற்போடப்படுவதை அவர் விரும்பலாம். அது மட்டுமின்றி, சிக்கலான பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. நேருக்கடிகள் மேலும், மேலும் அதிகரித்த வண்ணமே உள்ளன. இதனால் மக்களுக்கு ரணில் விக்ரமசிங்க மீதான நம்பிக்கை குறைந்து கொண்டே வருகின்றது. நாட்டை தலைமை தாங்க எவரும் முன்வராத நிலையில் ரணில் விக்ரமசிங்கவே நாட்டைப் பொறுப்பேற்றார் என ஐக்கிய தேசியக் கட்சியினர் கூறிக்கொண்டிருந்தாலும், பொதுமக்கள் ஏமாற்றமடைந்தே வருகின்றனர்.

ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க வந்ததும் சர்வதேச உதவிகள் வரும், வெளிநாட்டில் இருந்து நிவாரணங்கள் கிடைக்கும், குறிப்பாக அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி குறையும் என்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பாக இருந்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியையே ரணில் விக்ரமசிங்க பெரிதாக நம்பியிருந்தார். பேச்சுவார்த்தைகள் வெற்றி எனவும், விரைவில் நிதியுதவி கிடைத்துவிடும் எனவும் அரச தரப்பு தகவல்கள் வெளியான போதும், அது தள்ளிப்போய்க் கொண்டே உள்ளது. இவ்வருட இறுதிக்குள் அது கைக்கெட்டிவிடும் என்று கூறப்பட்ட நிலையில் இப்போது 2023ஆம் ஆண்டின் முற்பகுதியேலேயே சரிவரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரிகள் குறையும் என மக்கள் பெரிதும் எதிர்பார்த்த நிலையில் புதிய புதிய வரிகள் அறிமுகமாகின்றன. நாட்டில் பொருட்களின் விலைகள் நான்கு மடங்கிற்கு மேல் அதிகரித்துள்ள நிலையில் ஐந்து, பத்து ரூபாய் என விலைகள் குறைக்கப்பட்டு அது அரசாங்கத்தினால் பிரசாரப்படுத்தப்படுகின்றது. உதாரணத்திற்கு ஐம்பது ரூபாயாக விற்பனை செய்யப்பட்ட பாணின் விலை ஒருசில வாரங்களிலேயே கட்டம் கட்டமாக 200 ரூபாய்க்கு வந்தது. தற்போது அதன் விலை 190 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த 10 ரூபாய் குறைப்பை அரசாங்கம் பெரியதொரு விலைக் குறைப்பாக அறிவிக்கின்றது.

கடந்த ஒகஸ்ற் மாதம் மேற்கொள்ளப்பட்ட 75வீத மின்கட்டண அதிகரிப்பால் ஒட்டுமொத்த மக்களும் கடுமையான பொருளாதார சிக்கல்களுக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், மேலும் 65 வீதமளவில் அதனை அதிகரிக்கப் போவதாக அறிவிக்கப்படுகின்றது. இது ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு பேரிடியாக அமைந்துள்ளது. இவ்வாறு மின்கட்டணத்தை அதிகரிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றும், இல்லாவிட்டால், நாளாந்த மின்வெட்டுக் காலத்தை குறைந்தது ஆறு மணித்தியாலங்களாக அதிகரிக்க வேண்டியிருக்கும் என்றும் மின்சக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார். அமைச்சரின் இந்தக் கருத்து மக்களை அச்சுறுத்துவது போன்றே அமைந்துள்ளது.

விலை உயர்வுகள், வரிச்சுமைகள் போன்ற அழுத்தங்கள் 2023ஆம் ஆண்டில் மேலும் அதிகரிக்கும் நிலைதான் உருவாகியுள்ளது. இதனால், வரப்போகும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் ஆணை ஜனாதிபதி ரணில் தலைமையிலான அரசாங்கத்திற்கோ, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஓர் ஆசனத்தைக் கூடப் பெறமுடியாமல் போன ஐக்கிய தேசியக் கட்சி மீண்டெழுவதற்கான சந்தர்ப்பத்தையோ ஏற்படுத்தப் போவதில்லை என்றே கணிப்பிட முடிகின்றது. எனவே, எவ்வாறாயினும் சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி கிடைக்கப்பெற்று மக்களின் எதிர்பார்ப்பை சிறிதளவேனும் நிறைவேற்றும் வரையில் தேர்தலை பிற்போடுவதையே ரணில் விக்ரமசிங்க விரும்புவார் என்பதுதான் உண்மை.


MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
Advanced function
Calculus & vectors
Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 416.732.2228

Mr.S.F.Xavier (Teacher)



Sam Surendran
Mortgage Broker
Licence # M16002312
647-922-5704
MORTGAGE ALLIANCE
Office: 1585 Markham Road, Unit 110, Scarborough ON. M1B 2W1

MORTGAGE OFFICE
GOOD SERVICE . GOOD LENDERS
GOOD RATES
Apply for your mortgage loan today
*Hiring Mortgage Agents, Commission Income
www.OKmortgages.ca

# நாமும் நமது இல்லமும் 622



ராஜா மகேந்திரன், PEng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

சகலரிற்கும் எனது புத்தாண்டு (2023) நல்வாழ்த்துகள்.
ஆரோக்கியமான, அமைதியான, செல்வச் செழிப்பான, சகலவளங்களும் பெற்று எல்லோரும் வாழ வாழ்த்துகள்.
- ராஜா மகேந்திரன்




ஆதன வியாபாரம் அதில் முதலீடு 2023ஆம் ஆண்டில் எவ்வாறு இருக்கலாம் என்பது, இன்று கனடிய மக்களின் முதன்மை சிந்தனைகளில் ஒன்று. மிகவும் ஆரோக்கியத்துடனும், உற்சாகத்துடனும் ஆரம்பித்த 2022ஆம் ஆண்டு ஆதன வியாபாரம் கனடிய மத்திய வங்கியின் தொடர்ச்சியான வட்டிவீத அதிகரிப்பால் 2022 இறுதியில் சிறப்பற்ற ஆண்டாக ஆதன வியாபாரத்தில் முடிவடைந்துள்ளது.

2022ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதம் (Bank Rate) 0.25%ஆகக் காணப்பட்டது. இந்த வட்டிவீதம் கனடிய சரித்திரத்தில் குறைவாகக் காணப்பட்டது.

கொரோனாவின் பாதிப்பிலிருந்து மக்களை காப்பாற்ற கனடிய, ஒன்றாறியோ அரசுகள் தாராளமாக உதவிகள் செய்தன. பண வீக்கம் கட்டுக்கடங்காமல் இக்காலத்தில் அதிகரிக்கத் தொடங்கியது. பொதுவாக கனடிய மத்திய வங்கியின் குறிக்கோளான 2% என்ற பணவீக்க எண்ணிக்கையைவிட மிகவும் அதிகமாகக் காணப்படத் தொடங்கியது. இதனைக் கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு, மத்திய வங்கி தொடர்ச்சியாக வட்டி வீதத்தை அதிகரிக்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டது.

இதனால் 2022ஆம் ஆண்டில் மட்டும் தொடர்ச்சியாக ஏழு (7) தடவை மத்திய வங்கி வட்டி வீதத்தை அதிகரித்தது. 2022ஆம் ஆண்டின் இறுதியில் கனடிய மத்திய வங்கியின் வட்டி வீதம் 4.25%ஆக அதிகரிக்கப்பட்டது. இதனால் கனடிய முதன்மை வட்டி வீதமும் 6.45%ஆக அதிகரிக்கப்பட்டது. இதுவே 2008ஆம் ஆண்டிற்குப் பிற்பாடான அதிகூடிய வட்டி வீதமாகும். இவ்வாறான நிலைமையில் 2023ஆம் ஆண்டில் ஆதன வியாபாரம் கால் எடுத்து வைப்பதனைக் காணலாம். ஏற்கனவே ஆதன விலையிலும் வியாபாரத்திலும் குறிப்பிட்டளவு இறக்கம் ஏற்பட்டதனைக் காணக்கூடியதாக இருந்தது. மக்கள் தமது ஆதனம் வாங்கும் முறையை மாற்றி உள்ளதனைக் காணக்கூடியதாக உள்ளது. தேவையை தள்ளி போட்டுள்ளனர்.

அண்மையில் வெளியான அறிக்கையில் அமெரிக்காவின் அநேகமான மாநிலங் களின் பொருளாதார வளர்ச்சி சுருங்கி வருவதனை தெரியப்படுத்தியுள்ளன. இதனால் புதிய வருடத்தில் பொருளாதார சுருக்கத்தை (Recession) அமெரிக்கா அடையலாம் என எதிர்பார்க்கப்படு கின்றது. இந்நிலைமை ஏற்படின் கனடா விலும் இதன் பாதிப்பு ஏற்படும். அவ்வாறான நிலைமை ஒன்று ஏற்பட்டால் இந்நிலையிலிருந்து மக்கள் மீள எவ்வளவு காலம் எடுக்கும். இவை யாவும் எதிர்பார்ப்புகளே. நிலைமை மாறலாம். இந்த நிலைமையால் மக்கள் தமது செலவு செய்யும் முறையை இறுக்கப்படுத்தியுள்ளதாகப் பொருளாதார நிபுணர் தெரியப்படுத்தியுள்ளனர்.

2020 தொடங்கி 2022ஆன் முதல் கால் பகுதிவரை கொரோணாவின் பாதிப்பால் மக்கள் பாதிக்கப்பட்டு இருந்தனர். மேலும், அண்மைக்காலமாக சீனாவில் அதிகரித்து வரும் கோவிட் பரவல், மேலும் பீதியை ஏற்படுத்தி வருகின்றது. ஏற்கனவே சில நாடுகள் சீனாவிலிருந்து வருவோரிற்கு மேலதிக கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி வருவதால், பொருளாதாரம் மந்த நிலையை நோக்கி செல்லக் கூடியதாகவே இருக்கலாம். 2020 - 2021ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிலைமை போல், மீண்டும் ஒரு நிலைமை ஏற்பட்டால் பொருளாதாரம் மிகவும் நெருக்கடி நிலையை ஏற்படுத்தும். மக்களால் தாங்க முடியுமா?

ஆனால், 2021 - 2022ஆம் ஆண்டின் நிலைமையும் இன்றைய நிலைமையும் சற்று வித்தியாசம். உலக நாடுகள் ஏற்கனவே இந்தப் பரவலைக் கட்டுத்தக் கூடிய வழிமுறைகளை கண்டு பிடித்துள்ளன. அவ்வாறான நிலைமை மீண்டும் ஏற்படாது என எதிர்பார்ப்போம். அவ்வாறாக ஏற்பட்டாலும் அரசுகள் இலகுவாக முகம் கொடுக்கும் எனவும் எதிர்பார்க்கலாம்.

புதிய ஆண்டு கனடியர்களினதும், மற்றைய நாட்டு மக்களின் வாழ்வும் சிறப்புற வாழ்த்துகள்.

# மிரளவைக்கும் எம்பாப்பே...!



- எஸ். கணேஷ் -

2022 பிபா உலகக் கோப்பை போட்டியில் இறுதி ஆட்டத்தில் பிரான்ஸ் அணியை வீழ்த்தி அர்ஜென்டினா கோப்பையை கைப்பற்றி உள்ளது. நடந்த போட்டியில் கடைசி நிமிடம் இரண்டு அணிகளும் 2 கோல் என்ற நிலையில் சமனில் இருக்க. மேலதிக 30 நிமிடம் கொடுத்து அதில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோல் போட ஆட்டம் பெனால்டி ஷூட் அவுட் வரை சென்றது.

இறுதிப்போட்டி, இரு அணிகளுக்கும் இடையிலானது என சொல்வதைவிட, மெஸ்சிக்கும் எம்பாப்பேவுக்கும் இடையிலானது என கூறுவது சரியாக இருக்கும்.

ஆட்டம் முடிய ஒன்பது நிமிடங்கள் இருந்த நிலையில், ஒரு பெனால்டி ஷாட் மூலம் கோல் அடித்து, அணியினருக்கு உயிர் கொடுத்தார் பிரான்ஸ் அணியின் எம்பாப்பே.

பிரான்சுக்கு 19 வயதில் உலகக் கோப்பையைப் பெற்றுத்தந்த, 23 வயதான அந்த வீரர் அதோடு நிறுத்திவிடவில்லை. அதற்கு அடுத்த நிமிடத்திலேயே மற்று மொரு கோல் அடித்து அர்ஜென்டினா வுக்கு அதிர்ச்சி கொடுத்தார். அதேபோல உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் ஹாட்ரிக் கோல்களை அடித்த இரண்டாவது வீரர் என்ற பெருமையும் எம்பாப்பேக்குக் கிடைத்திருக்கிறது.

23 வயதேயான எம்பாப்பே ஏற்கெனவே



உலகக் கோப்பை போட்டிகளில் அதிக கோல் அடித்தவர்கள் பட்டியலில் ரொனால்டோ, மாரோடோனா போன்ற மாபெரும் வீரர்களை முந்திவிட்டார். இறுதிப் போட்டியில் மூன்று கோல்களை அடித்ததன் மூலம் அவர் பீலேயின் கோல் எண்ணிக்கையை சமன் செய்திருக்கிறார்.

இதையடுத்துதான் அவர் திருநங்கை ஒருவருடன் காதலில் இருப்பதாகக் கூறப்பட்டது. அவரின் பெயர் ஐனெஸ் ராவு. 2017ல் இவர் உலகம் முழுக்க பிரபலம் ஆனார். பிரபல பிளே பாய் நாளிதழின் கவரில் இடம்பிடிப்பது என்பது மிக மிகக் கடினம். இந்த நிலையில் அந்த கவர் பேஜில் இடம்பிடித்த முதல் திருநங்கை இவர் என்ற புகழை பெற்றார். அதன்பின் ஐனெஸ் - எம்பாபே இருவரும் ஒன்றாக இருக்கும் புகைப்படங்கள் பல வெளியாகின. ஐனெஸ் பிகினியில் இவருடன் நெருக்கமாக கடலில் இருக்கும் புகைப்படங்கள் பல வெளியாகி விவாதத்தை ஏற்படுத்தின.

அடுத்து ஸ்டெல்லா மேக்ஸ்வெல் 32 வயது மற்றும் முன்னாள் விக்டோரியா சீக்ரெட் மாடல் ஆவார். இவர் பிரபலமான வர் மற்றும் இன்ஸ்டாகிராமில் 80 லட்சத்துக்கும் அதிகமான பாலோவர்கள் உள்ளனர். மே 2022இல் இருந்து இவர்கள் டேட்டிங் செய்து வருகின்றனர். அவர் சினிமா நடிகையை காதலித்தாலும், திருநங்கையை காதலித்தாலும், இல்லை தன் பாலின உறவு கொண்டாலும் அது அவரின் தனிப்பட்ட விருப்பம் முடிவு. இதில் ரசிகர்கள், விமர்சகர்கள் சொல்ல ஒன்றும் இல்லை.

1986-ம் ஆண்டில் மரடோனா தலைமை யில் அர்ஜென்டினா அணி மகுடம் சூடியது. அவரது வழியில் மெஸ்சியும் கோப்பையை வென்றுள்ளார். 2002-ம் ஆண்டுக்கு பிறகு தொடர்ந்து கோப்பையை வென்று வந்த ஐரோப்பிய நாடுகளின் வீறுநடைக்கு அர்ஜென்டினா முடிவு கட்டியது. 35 வயதான மெஸ்சி கடந்த ஆண்டு கோபா அமெரிக்க கோப்பையை வென்று நாட்டுக்கு பெருமை சேர்த்தார். தற்போது உலக கோப்பையை பெற்று கொடுத்துள்ளார்.

மரடோனாவை போலவே மெஸ்சியும் அர்ஜென்டினாவை மிகவும் உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்று விட்டார். இந்த உலக கோப்பை போட்டி தொடரில் மெஸ்சியின் ஆட்டம் மிகவும் அபாரமாக இருந்தது. அவர் மொத்தம் 7 கோல்கள் அடித்துள்ளார். மேலும் 4 கோல் அடிக்க உதவி புரிந்துள்ளார்.

உலகக் கோப்பையில் அதிக ஆட்டங் களில் விளையாடியவர் (26 ஆட்டம்) என்ற சாதனையை மெஸ்சி படைத்தார். 2010-ம் ஆண்டு ஸ்பெயின் அணி தொடக்க லீக்கில் தோற்று அதன் பிறகு மகுடத்துக்கு முத்தமிட்டது. இதேபோல் இந்த உலகக் கோப்பையில் அர்ஜென்டினா முதல் லீக்கில் சவுதி அரேபியாவிடம் தோற்று விட்டு இப்போது சாம்பியனாக உருவெடுத்துள்ளது.

இதன் மூலம் உலக கோப்பை தொடரில் சிறந்த வீரருக்கான தங்க பந்து (கோல்டன் பால்) விருது மெஸ்சிக்கு கிடைத்தது. அவர் ஏற்கனவே 2014 உலக கோப்பையிலும் தங்க பந்து விருதை பெற்று இருந்தார். அந்த உலக கோப்பையில் அர்ஜென்டினா இறுதி போட்டியில் ஜெர்மனியிடம் தோற்று இருந்தது.

உலக கோப்பையில் கோல்டன் பால் விருதை 2 தடவை பெற்ற முதல் வீரர் என்ற வரலாற்றை மெஸ்சி படைத்தார். மெஸ்சி ஒட்டு மொத்த உலக கோப்பை களிலும் சேர்த்து 13 கோல்கள் அடித்துள்ளார். 26 ஆட்டத்தில் அவர்

(தொடர்ச்சி 04ஆம் பக்கம்...)

# புத்தாண்டில்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இதனால் 2023 - 2024ஆம் ஆண்டுகளில் கனடாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 2%இற்கும் குறைவாகவே இருக்கும் எனப் பொருளாதார நிபுணர் தெரிவித்துள்ளனர்.




பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த இறுக்கமான பணக்கட்டுப்பாட்டுக் கொள்கைகளை மத்திய வங்கிகள் நடைமுறைப்படுத்துவது கொள்கை ரீதியில் மிகவும் சரியான முறை என்றாலும், அது நடைமுறைக்குச் சாத்தியப்படுமா என்பது கேள்விக்குறி எனப் பல பொருளாதார அறிஞர்கள் கூறுகின்றனர்.

நாட்டு மக்களின் தேவைக்கான செலவீனங்களே கனடாவில் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக உள்ளது. 2022ஆம் ஆண்டில் கனடாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியின் 80%, மக்கள் தமது தேவைக்காக செலவழித்ததால் ஏற்பட்டது. கனடிய வங்கி இறுக்கமான பணக்கட்டுப்பாட்டுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தத் தொழில்புரியும் குடும்பத்தவர் தமது செலவீனங்களைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்க முயல்வர். இது அவர்களுக்குத் தமக்கு வேலை நீக்கம் கிடைத்து விடுமோ என்ற பயத்தால் எற்படுவது ஆகும். இதனால் மக்கள் தமது தேவைக்காகச் செலவு செய்வது குறைவடைந்து விடும்.

பொதுவாக நாட்டில் பொருளாதார வளர்ச்சி குன்றி நாடு பொருளாதார மந்த நிலையை நோக்கிச் செல்லும்போது நிறுவனங்களின் உற்பத்தி குறைந்து வேலை நீக்கங்கள் அதிகரிக்கும். இதன் மூலம் வேலையற்றோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.


ஆனால், கனடாவில் தற்போது வேலைக்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர். 2022 செப்ரெம்பர் மாத புள்ளி விபரங்களின்படி, கனடாவில் ஒரு மில்லியன் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர். பல தொழில் நிறுவனங்கள் வேலைக்குப் போதிய ஆட்கள் இல்லாமல் திண்டாடுகின்றன. நிறுவனங்களுக்குத் தேவைப்படும் தொழிலாளர்களின் தகுதியும் திறமையும் தற்போது வேலை தேடுவோருக்கு உள்ள தகுதியும் திறமையுடனும் ஒத்து வராததும் இதற்கு ஒரு முக்கிய காரணமாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இக்காரணங்களால் கனடாவில் ஒரு மில்லியன் வேலைக்கு ஆட்கள் தேவைப்பட்டாலும் 2023ஆம் ஆண்டில் சில வேலை நீக்கம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கும். இதனாலேயே 2023ஆம் ஆண்டில் கனடாவில் ஏற்படும் பொருளாதார வளர்ச்சிக் குறைவு பொருளாதார மந்தநிலை வரை செல்லாது எனக் கூறப்படுகிறது.

கனடாவைப் பொறுத்தமட்டில் பொருளாதார வளர்ச்சிக்குறைவு எல்லா மாகாணங்களையும், பிரதேசங்களையும் ஒரே மாதிரிப் பாதிக்க மாட்டாது. சஸ்கச்சுவான் மாகாணம் விவசாயத்தில் பெருமளவு தங்கியிருப்பதால் அது உலகளாவிய அதிகரித்த விவசாயப் பொருட்களின் தேவையால் மிகவும் பயனடையும். அல்பேட்டா மற்றும் நியூபவுண்லாந்து மாகாணங்கள் எரிபொருள் உற்பத்தியில் பெருமளவு தங்கியிருப்பதால் அவையும் உலகளாவிய எரிபொருள் விலை அதிகரிப்பால் மிகவும் பயனடையும்.

கட்டுமானத்துறை மற்றும் பாவனைப் பொருட்களின் உற்பத்தியில் தங்கியிருக்கும் ஒன்ராறியோ மற்றும் கியூபெக் மாகாணங்களே கனடாவில் பொருளாதார வளர்ச்சிக் குறைவால் முதலில் பாதிக்கப்படும் மாகாணங்களாக இருக்கும். இங்குள்ள வணிக நிறுவனங்கள் பொருளாதார வளர்ச்சிக் குறைவால் பாதிப்படைவதைவிட தொழிலாளர் தட்டுப்பாட்டாலேயே பெருமளவு பாதிக்கப்படுவர்.

பெரும்தொற்று நோய்ப்பரவல் காலத்தில் குறைந்திருந்த குடிவரவாளரின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளது. இது தொழிலாளர் தட்டுப்பாட்டை ஓரளவு நிவர்த்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.



Thanks: Tony Bock Photo

ஆனாலும், தற்போது வேலையில் இருந்து பெருமளவு ஓய்வுபெறும் வயது வந்தோரின் தொழில்பயிற்சி மற்றும் கல்வித் தகைமை, தற்போது வேலைக்குள் புகும் இளையோரின் தொழில்பயிற்சி மற்றும் கல்வித்தகைமையுடன் வேறுபடுவது தொழில் நிறுவனங்களுக்கு அவ்வெற்றிடங்களை நிரப்ப மிகவும் சவாலாக இருக்கிறது.

பாவனைப் பொருட்கள் உற்பத்தியில் தங்கிருக்கும் நிறுவனங்கள் மற்றும் கட்டுமானத்துறையில் ஈடுபடும் நிறுவனங்கள் தற்போது தமது பொருட்களின் விநியோக சங்கிலித் தொடர்பு முறையில் முட்டுக்கட்டையை எதிர்நோக்கியுள்ளனர். இதுவும் அவர்களது வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்றன.

இவ்வாறான சவால்களுக்கு மத்தியில் கனடிய நிறுவனங்கள் ஒரு பொருளாதார வளர்ச்சிக்குறைவை எதிர்நோக்கத் தயாராகவே இருக்கின்றன. 2022 ஒக்ரோபரில் BDC நடத்திய கருத்துக் கணிப்பின்படி 88%ஆன கனடிய நிறுவனங்கள் 2022ஆம் ஆண்டில் இலாபத்தை தமது தொழிலில் காட்டக் கூடிய நிலையில் இருப்பதாகக் கூறியிருந்தன. அத்துடன் 69%ஆன நிறுவனங்கள் 2023ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சிக்குறைவையோ அல்லது பொருளாதார மந்தநிலையையோ, சமாளிப்பதற்குத் தயாராகவே இருப்பதாகத் தெரிவித்திருந்தன.



இதனால் கனடியர் 2023இல் ஒரு பொருளாதார மந்தநிலை ஏற்படும் என்று அச்சமடையத் தேவையில்லை. கனடியருடைய வீட்டு நிதிநிலைமை திருப்திகரமாகவே உள்ளது. இது கனடியரைப் பொருளாதார வளர்ச்சிக்குறைவு ஏற்படும் போது அதை சமாளித்து நாட்டை பொருளாதார வளர்ச்சிக்கு எடுத்துச்செல்ல சாதகமான நிலையிலேயே வைத்துள்ளது. எனவே பொதுமக்கள் பொருளாதார வளர்ச்சி குறித்து அவதானமாக இருக்க வேண்டுமேயொழிய எச்சரிக்கை அடையத் தேவையில்லை. இவ்வாறு BDCயினுடைய துணைத்தலைவர் Pierre Cleroux தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.




# புத்தாண்டை எப்படி வரவேற்போம்?

புத்தாண்டு பிறந்தால் முகத்தில் ஓர் மகிழ்ச்சி
மனதில் ஓர் உற்சாகம் எண்ணங்கள் சிறகடிக்கும்
புதுவருட சபதங்கள் நினைவுக்கு வரும்
இம்முறை எப்படியும்
சபதங்களை நிறைவேற்றுவேன் என்றே
ஆவேசத்துடன் காகிதத்தில்
குறிக்கமுற்பட்டபோது
ஆவேசம் கூடாது என்று
அறிவு உணர்த்த
உணர்வோடு குறித்தேன்




ஒன்று மனவெழுச்சிசமநிலை பேணல்
இன்பத்தில் துள்ளிக்குதித்தலும்
துன்பத்தில் சோர்ந்து துவண்டு விடுவதும்
இனிமேல் வேண்டவே வேண்டாம்
இரண்டையும் வாழ்வின் இயல்பாக உணர்ந்தால்
துன்பம் ஏது?
இன்பத்தில் துள்ளிக்குதித்தால் துன்பத்தை
தாங்கமுடியுமா?
இயற்கை அழிவுகள் செயற்கை அழிவுகள் ஒருபுறம்
சமாதான வாழ்வைநோக்கி நகர்த்தும்
அரசுகள், பெரியோர்கள் மறுபுறம்
நன்மையும் தீமையும் நிறைந்த உலகில்
அடுத்துவேண்டுவது
மனப்பக்குவம் பேணல் என்றே
இரண்டாவதாக் குறித்தேன்.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்ற
கணியன் பூங்குன்றானார் கூற்றை
உறுதியாக பின்பற்றலே
மூன்றாவது என்றே குறித்தேன்

குறித்தால் மட்டும் போதுமா?
நடைமுறைப்படுத்தவேண்டாமா?
அதற்கு வழி என்ன?
பிரகடனப்படுத்தலே அதற்குவழி
பிரகடனப்படுத்தினால்
அதுவே ஓர் உந்துசக்தியாகி
ஊக்குவிக்கும் அன்றோ?
புத்தாண்டை வரவேற்போம்
பயனுள்ள சபதங்களுடன்
வருக புத்தாண்டே
தருக நல்லறிவும் உறுதியும்

\- ரஞ்சி கதிர்

# நானிலம் போற்றும் நட்பு - 12



- அகணி -
authorakani@gmail.com

அனைவருக்கும் இனிய ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துகள்.




"ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும்."

(அதிகாரம் நட்பாராய்தல், குறள் 792) என்ற குறளுக்கு "ஆராய்ந்து ஆராய்ந்து நட்புக் கொள்ளாதவனுடைய நட்பு, இறுதியில் தான் சாவதற்குக் காரணமான துயரத்தை உண்டாக்கிவிடும்." என்று உரையாசிரியர் மு. வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"பலமுறை ஆராய்ந்து பார்க்காமல், நட்புக் கொண்டால், முடிவில் அந்த நட்பேதான் சாகும் அளவிற்கான துன்பத்தைத் தரும்." என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு. மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

"ஆராய்ந்து கொள்ளாதவன் நட்பு சாவுக்குக் காரணமான துன்பத்தைத் தரும்." என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

இந்தக் குறளில் ஆராயாமால் நட்பு செய்தால் அந்த நட்பே சாகும் நிலை ஏற்படும் என்பதை இந்தக் குறள் எடுத்துக் கூறுகிறது.

சங்கம் மருவிய காலத்தில் பல சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நாலடியாரில் நட்பு பற்றிக் கூறும் கருத்துக்களையும் ஆராய்வோம். நாலடியார் பொருட்பாலில் அதிகாரம் 22 நட்பாராய்தலில் நாலடியார் பாடல் 225 இனைக் கவனிப்போம்.

225. "இன்னா செயினும் விடற்பாலர் அல்லாரைப்
பொன்னாகப் போற்றிக் கொளல்வேண்டும் - பொன்னொடு
நல்லிற் சிதைத்த தீ நாடொறும் நாடித்தம்
இல்லத்தில் ஆக்குத லால்."

இந்தப் பாடலுக்கு ஊ.புட்பரதச்செட்டியார் அவர்கள் கூறும் கருத்துரையைக் காண்போம்.

"பொன்னொடு நல் இல் சிதைத்த - பொன்னோடு கூட நல்ல வீட்டைக் கட்டழித்த, தீ - நெருப்பை, நாள்தோறும் - ஒவ்வொரு நாளும், நாடி - விரும்பி, தம் இல்லத்தில் - தமது மாளிகையில், ஆக்குதலால்-(யாவரும்) உண்டாக்குவத னால், இன்னா செயினும் - துன்பங்களைச் செய்தாலும், விடற்பாலர் அல்லாரை - விடக்கூடாதவர்களை, பொன்னாக போற்றிக் கொளல் வேண்டும் - பொன்போல் நினைத்து மேலாகக் கொள்ள வேண்டும்,"

வீட்டையும் பொன்னையும் அழித்ததென்று கைவிடாமல் நெருப்பைச் சனங்கள் தினம் வீடுகளில் உண்டாக்காமற் போனால் எந்தச் சுகமும் வாய்க்காது, அதுபோல் துன்பஞ் செய்தாலும் உதவியான சிநேகிதரை கைவிடக் கூடாதென்பது கருத்து.

விடலாகிய பான்மையுடையவர் விடற்பாலர் பான்மை - இயல்பு. முற்பாட்டிற் கூறியபடி நெஞ்சஞ் சுடுதற்கு மூட்டிய தீயானாலும் பொறுத்தல் கடமை என்றார்.

இந்தப் பாடலுக்கு ஞா.மாணிக்கவாசகன் வழங்கியுள்ள உரையை இப்பொழுது கவனிப்போம்.

"துன்பமே தந்தாலும் வெறுத்தொதுக்கி விட்டுவிடக் கூடாத இனிய நண்பரைப் பொன்போல் போற்றிப் பாதுகாத்து வரல் வேண்டும். பொன்னையும் பொருளையும் அழிக்கின்றது நெருப்பென்றாலும் அதை அன்றாடம் நாம் நமது வீட்டில் உணவு சமைக்க மூட்டுகிறோமல்லவா? அதுபோலத் தான், தவறு செய்தாலும் நண்பரைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்."

226. "இன்னா செயினும் விடுதற்கு அரியாரைத்
துன்னாத் துறத்தல் தகுவதோ - துன்னருஞ்சீர்
விண்குத்து நீள்வரை வெற்ப! களைபவோ
கண்குத்திற்று என்றுதம் கை."

இந்தப் பாடலுக்கு ஊ.புட்பரதச்செட்டியார் அவர்கள் கூறும் கருத்துரையைக் காண்போம்.

"துன் அரு சீர் - சேருதற்கரிய சிறப்புள்ள, விண்குத்து - வானத்தைக் குத்துகின்ற, நீள் வரை - நீண்ட மூங்கிலை யுடைத் தான, வெற்ப - மலைக்கு உரியவனே இன்னா செயினும் - துன்பங்களைச் செய்தாலும், விடுதற்கு அரியாரை - விடக்கூடாதவர்களை, துன்னா - சேராமல், துறத்தல் - விட்டுவிடல், தகுவதோ - தகுந்ததோ, கண் குத்திற்று என்று - கண்ணைக் குத்தினது என்று, தம் கை - தமது கையை, களைபவோ - நீக்கிப் போடுவார்களோ (உலகத்தார்)," இந்தப் பாடலுக்கு ஞா.மாணிக்கவாசகன் வழங்கி யுள்ள உரையை இப்பொழுது கவனிப்போம்.




"தவறுகளே செய்தாலும், விலக்கி விடக் கூடாத நண்பர்களை வெறுத்தொதுக்க லாமோ? நெருங்க முடியாத உயரமும் பெருமையும் உடைய வான முகட்டை இடிக்கும் உயர்ந்த மலைவளம் உடைய நாட்டுக்கு உரியவனே! தவறிப் போய்க் கண்ணைக் குத்தி விட்டது என்பதற்காகக் கையை யாராவது வெட்டிக் கொள்வார்களா?"

227. "இலங்குநீர்த் தண்சேர்ப்ப! இன்னா செயினும்,
கலந்து பழிகாணார் சான்றோர் - கலந்தபின்
தீமை எடுத்துரைக்கும் திண்ணறி வில்லாதார்
தாமும் அவரின் கடை."

"இலங்கு நீர் தண் சேர்ப்ப - விளங்குகின்ற ஜலத்தினால் குளிர்ச்சியான கடற்கரை யுடையவனே, இன்னா செயினும் -, சான்றோர் - பெரியோர், கலந்து - சிநேகித்து, பழி காணார் - குற்றத்தைப் பார்க்க மாட்டார் கலந்த பின் - நேசித்த பின்பு, தீமை எடுத்து உரைக்கும் - (சிநேகிக்கப்பட்ட வருடைய) குற்றங்களை எடுத்துச் சொல்லுகின்ற, திண் அறிவு இல்லாதார் தாமும் - திடமான அறிவில்லாதவர்களும், அவரில் கடை - தீமை செய்யு நேசரைக் காட்டிலுந் தாழ்மையானவர், தாம் - அசை."

பழி - முதனிலைத் தொழிற்பெயர், பழிக்கப்படுவதற்கு ஆகுபெயர் செயப்படு பொருள் விகுதி புணர்ந்து கெட்ட பெயரென்றுஞ் சொல்லலாம்.

இந்தப் பாடலுக்கு ஞா.மாணிக்கவாசகன் வழங்கியுள்ள உரையை இப்பொழுது கவனிப்போம்.

"நீர் சூழ்ந்த அழகிய கடற்கரைப் பட்டினத்திற்குரியவனே, துன்பம் தந்தாலும் விரும்பி நட்புக் கொண்டவர்களிடம் பெரியோர் குறை காண மாட்டார்கள். விரும்பிப் பழகிய நண்பரிடத்துக் குறை கண்டு தூற்றுபவர்கள், தவறு செய்த நண்பர்களை விடத் தாழ்ந்தவர்கள்."

228. "ஏதிலார் செய்தது இறப்பவே தீதெனினும்
நோதக்கது என்னுண்டாம் நோக்குங்கால்! - காதல்
கழுமியார் செய்த கறங்கருவி நாட!
விழுமிதாம் நெஞ்சத்துள் நின்று."

"கறங்கு அருவி நாட - ஒலிக்கின்ற மலையருவிகளுள்ள நாட்டுக்குடையவனே ஏதிலார் செய்தது - அயலார் செய்தது - அயலார் செய்தது, இறப்பவே தீது எனினும் - மிகவுங் கொடிய தானாலும், நோக்குங்கால் - (விதியை) யோசித்தால், நோதக்கது - வெறுக்கத்தக்கது, என் உண்டாம் - என்ன உண்டு, காதல் கழுமியார் - அன்பு மிகுந்தவர், செய்த - செய்த (தீமை), நெஞ்சத்துள் நின்று - மனதில் நின்றால் சிந்தித்தால் , விழுமிது ஆம் - சிறந்த தாய்விடும்,"

அயலார் செய்ததே யோசிக்குங்கால் வெறுக்கத் தகாததானால் அன்பர் செய்தது பிரியமாகும் என்பது கருத்து.

"செய்தது என்பது ஈறு குறைந்தது அல்லது விழுமிது என்பது சிறந்த பொருளுக்கு ஒரு பெயராகக் கொள்ளத்தக்கது. நோதற்குத் தக்கது நோதக்கது நோ - முதனிலைத் தொழிற் பெயர், நான்கனுருபு தொக்குத் தக்கதோடு ஒரு மொழித் தன்மைப் பட்டதெனக் கொள்க. கழுமியார் - கழுமு - பகுதி, இன் - ஈறு குறைந்தது, ஆர் - விகுதி."

இந்தப் பாடலுக்கு ஞா.மாணிக்கவாசகன் வழங்கியுள்ள உரையை இப்பொழுது கவனிப்போம்.

"பகைவர்கள் நமக்குப் பெரும்துன்பம் உண்டாக்குகிறார்கள். ஆப்படி அவர்கள் நமக்கு இடர் செய்வதற்கு ஒரு காரணம் உண்டு. அது என்னவென்று எண்ணிப் பார்த்தால் அது அவர்கள் அறியாமை யால் செய்த செயல் என்று தள்ளி விடுவதே சிறப்பு. ஒலிக்கும் அருவி நீர் பாயும் மலைநாட்டுக் குரியவனே, அன்புடைய பெரியோர் நமக்கு ஏதேனும் துன்பம் தந்தாலும், அதை அவர்கள் நமக்கு முன்பு செய்துள்ள நல்லதை எண்ணிப் பொறுத்துக் கொள்ள வேண்டும்."

நட்பினை எளிதாக இழந்து விட முடியாது, இழந்து விடவும் கூடாது என்ற கருத்தை மேற்காட்டிய பாடல்கள் எடுத்தியம்பு கின்றன. நட்பைப் போற்றி வாழவேண்டும் என்பதை மனதில் நினைத்துக் கொள்வோம்.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம்.

(தொடரும்)



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# படப்பிடிப்பு முடிந்த பின்னும் பாத்திரமாகவே வாழ்ந்தேன்!

## வேல ராமமூர்த்தி நேர்காணல் நேர்கண்டவர்: அமலன்

தமிழின் பிரபல முற்போக்கு எழுத்தாளர்களில் ஒருவரும், 45 ஆண்டுகளாகத் தொடர்ந்து எழுதி வருபவருமான வேல ராமமூர்த்தி இப்போது பிரபல திரைப்பட நடிகரும்கூட. ‘மதயானை கூட்டம்’ படத்தில் அரிதாரம் பூசி கவனம் ஈர்த்தவர், ‘கிடாரி’யில் கொம்பையா தேவனாக, நடிப்பில் தான் ஒரு பெருங்கலைஞன் என்று நிரூபித்தார். மண்ணின் மனத்தையும் கிராமத்து மனிதர்களின் குணத்தையும் எழுத்துகளில் பதிவு செய்தவர், அதனையே இப்போது திரைப்படங்களில் நடிகனாகப் பிரதிபலிக்கிறார். வயது அறுபதைக் கடந்தும் பாறை உடம்பும் பண்பட்ட நடிப்புமாகத் தமிழ் திரைத்துறைக்குக் கிடைத்த பெரிய வரவாகத் தன்னை அடையாளாப்படுத்தி இருப்பவரை சந்தித்தோம்.

மனைவி, மக்கள், பேரக் குழந்தைகள் என்று குதூகலித்த குடும்பத்தினரை அறிமுகம் செய்த வேல ராமமூர்த்தி, “இடதுசாரி இயக்கங்கள், கூட்டங்கள் என்று நான் ஊர் சுற்றிய பொழுதுகளில் என்னை அனுசரித்து என் குடும்பத்தின் பாரம் சுமந்து பாசம் ஊட்டிய மனைவி இவர்கள்தான். இது என் மகன், இந்த இரண்டு பெரும் என் மகள்கள். ஆறு பேரக்குழந்தைகள்” என்று குடும்பத்தை அறிமுகப்படுத்திவிட்டு பேட்டிக்குத் தயாரானார்.

**எழுத்தாளரான நீங்கள் நடிகனான கதை சொல்லுங்களேன்?**

நாற்பது வருடங்களுக்கும் மேல் தொடர்ந்து எழுத்தாளராக இயங்கி வந்த என்னை தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே தெரிந்திருந்தது. 2013-இல் ‘மதயானை கூட்டம்’ வெளியான இரண்டாவது நாள், நான் தங்கியிருந்த விடுதியில் இருந்து சாலையில் இறங்கி நடந்தபோது என்னைப் பார்த்தவர்கள் எல்லாரும் சூழ்ந்துகொண்டனர். அவர்கள் கை கொடுத்து பாராட்டின போதுதான் திரைப்படம் எவ்வளவு தூரம் மக்களிடையே நம்மை கொண்டு செல்லும் என்பதை உணர்ந்தேன்.

அதற்கு முன்பே திரைத்துறை பிரபலங்கள் பலர் என் நண்பர்களாக இருந்தனர். என்னுடைய கதைகளைப் படமாக்கும் பேச்சுகள், முயற்சிகள் தொடர்ந்து நடந்து



கொண்டிருந்தது. ஆனால், எப்போதும் நடிக்கும் திட்டம், ஆசை இல்லை. இந்நிலையில், இயக்குநர் விக்ரம் சுகுமார் ‘மதயானை கூட்டம்’ படத்துக்காக என்னை அணுகினார். அவர் பரமக்குடிக்காரர். நான் அங்கு தபால் அலுவலகத்தில் வேலை செய்தபோது எழுத்தாளர் சங்கம், அறிவொளி இயக்கம், இடதுசாரி கட்சி மேடைகளில் தோன்றிய என்னை சிறு வயது பையனாக பார்த்திருக்கிறார். பிறகு படம் இயக்கும் முயற்சியில் அவர் இருந்தபோது என்னை மனதில் வைத்து நடிக்கக் கேட்டார்.

எனக்குப் படத்தில் நடிக்கப் பயம். திரைத்துறைக்கு வந்தால் எழுத்தாளராக இருக்கும் கொஞ்சநஞ்ச பெயரும் போய்விடுமோவென்று நடிக்கமாட்டேன் என்று அவரிடம் சொல்லிவிட்டேன். பிறகு இரண்டு மாதம் கழித்து சென்னைக்கு வந்தபோது மறுபடியும் என்னை சந்தித்து ‘மதயானை கூட்டம்’ கதையையும் என் கதாபாத்திரத்தையும் சொன்னபோது நல்ல கதாபாத்திரமாக இருக்கே என்று தலையை ஆட்டினேன். அதன்பின்னர் திரைத்துறை என்னை இழுத்து வைத்துக்கொண்டதில் மகிழ்ச்சிதான்.

**நடிகர் அவதாரம் பிடித்திருக்கிறதா?**


கேரளாவில் அடூர் கோபாலகிருஷ்னன் போன்ற மலையாள திரைத்துறையின் ஜாம்பவான்கள் பலர் சாதாரணமா இருப்பார்கள். எந்த ஆர்ப்பாட்டமும் இல்லாமல் சாதாரணமா நடந்து போவார்கள். தமிழ்நாட்டில் அப்படியெல்லாம் போகமுடியாது. நாம அதை உடைத்திட வேண்டுமென்று நான் நடிகனான புதிதில் நினைத்தேன். ஆனால், அது முடியவில்லை. தலைக்கவசம் அணிந்துகொண்டு போனால்கூட அடையாளம் கண்டுபிடித்து விடுகிறார்கள். மதுரையில் ஒரு


(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)


AYPR General Contractor

Phone : 416-871-4402 Email:yohanrama@ayprgeneralcontractor.ca

website : ayprgeneralcontractor.ca







- Full home renovation
- Tiles, hardwood flooring
- Kitchen Cabinet
- Stair casing
- Electrical
- Plumbing
- Heating, Cooling
- Roofing
- Finish unfinished basement with permit
- We can arrange Finance for Renovation
- Built new house, old property or new construction on a bare land

*We provide Reliable services, we can complete your project on a timely manner.*

*Honesty is our key to success.*

THE LANDMARK

# HILLCREST PLAZA





North West Side View


North Side - Aerial View


North East View

17518 Old Highway 2
Quinte West
Trenton







Price is what you pay.
Value is what you get.

1 DOLLARAMA

2 Tim Hortons

3 TinyHearts Child Care

Available For Lease

4 Medical Institute
Banks
5 Retail
Restaurant

(416) 666-5051

312 - 3660 Midland Avenue Scarborough ON M1V 0B8 | info@thelandmark.ca




**நீண்ட தூர நெடுஞ்சாலை AZ டிரைவர் தேவை**

அணிகள் மட்டும்**
பாதைகள் NB-ON-US-ON*
பாதைகள் US மத்திய மேற்கு & கிழக்கு கடற்பரப்பு
(NC, SC, GA, FL, TX, AR, MO, ID, KY, VA, PA, NJ, WI, IL, NE, MN)

- ✓ $2500 கையொப்பம் போனஸ்*
- ✓ $500 பரிந்துரை போனஸ்*
- ✓ அனுபவத்தைப் பொறுத்து ஒரு மைலுக்கு $0.70 வரை சம்பாதிக்கலாம்.
- ✓ 6-8 நாட்கள் வெளியே தங்க விரும்பும் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- ✓ குறைந்தபட்ச வாராந்திர ஊதியம் $2200 முதல் $2500 வரை சம்பாதிக்கலாம்.
- ✓ தானியங்கி டிரக் புதிய மாடல்கள்; Freighliner & Volvo
- ✓ பிரத்யேக பாதைகள்.
- ✓ உங்கள் அரை மாத வருமானத்தை நாங்கள் நேரடியாக உங்கள் வங்கியில் டெபாசிட் செய்கிறோம்.

**குறைந்தபட்ச தேவைகள்:**

- ✓ AZ உரிமம் தேவை
- ✓ 6 மாதங்கள் சரிபார்க்கக்கூடிய அனுபவம்
- ✓ ஓட்டுநர் சுருக்கம்
- ✓ அமெரிக்கா விசா
- ✓ மருந்து சோதனை

நீங்கள் அழைக்கலாம்; Samuel (Sam) 902-932-7076 EXT#101 (அ) Shivek 902-316-2392

**வேலை வகைகள்:** முழுநேரம், நிரந்தரம்

**சம்பளம்:** வாரத்திற்கு $2,200.00-$2,500.00 வரை சம்பாதிக்கலாம்.

**பலன்கள்:**

- ✓ பல மொழி Dispatch ஆதரவு கிடைக்கிறது: தமிழ், ஆங்கிலம், இந்தி, பஞ்சாபி.
- ✓ மருத்துவ காப்பீடு.
- ✓ சாதாரண உடை.
- ✓ ஆன்-சைட் பார்க்கிங்.
- ✓ கூடுதல் ஊதிய வகைகள்.
- ✓ பாதுகாப்பு போனஸ் ஊதியம்.

**AZ HIGHWAY DRIVER WANTED !!**

TEAMS ONLY**
Lanes NB-ON-US-ON*
Lanes US Midwest & Eastern Seaboard
(NC, SC, GA, FL, TX, AR, MO, ID, KY, VA, PA, NJ, WI, IL, NE, MN)

- ✓ $2500 Signing Bonus*
- ✓ $500 Referral Bonus*
- ✓ Paying up to 0.70 per mile depending on the experience.
- ✓ Applicants willing to stay 6-8 days out will be given preference.
- ✓ Minimum weekly pay $2200 to $2500.
- ✓ Automatic truck Newer models; Freightliners & Volvos.
- ✓ Dedicated Shipments.
- ✓ Semi Monthly payments; Direct deposits to your Bank.

**MINIMUM REQUIREMENTS:**
- ✓ AZ License Required
- ✓ 6 Months Verifiable Experience
- ✓ Abstract
- ✓ US VISA
- ✓ Drug Test

You can call; Samuel (Sam) 902-932-7076 EXT#101 or Shivek 902-316-2392 text or WhatsApp

**Job Type:** Full-time, Permanent

**Salary:** Earn up to $2,200.00-$2,500.00 per week

**Benefits:**
- ✓ Multiple language Dispatch support Available: English, Hindi, Punjabi, Tamil
- ✓ Casual dress
- ✓ On-site parking
- ✓ Supplemental pay types:
- ✓ Safety Bonus pay

## BASEMENT FOR RENT

**BROCK ROAD & ROSSLAND (PICKERING)**
1Bedroom bsmt for rent. Parking & laundry. Avail. immediately.
**647.627.1424 / 647.271.5061**

**MARKHAM & BUROKE RD.**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep.entrance & laundry. No pets/smoke. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.686.8674**

**MORNINGSIDE & OLD FINCH**
3 bedroom bsmt for rent. Sep.entrance & laundry. No pets/smoke. Avail. February 01, 2023.
தொடர்புகளுக்கு: **647.388.5295**
**Email: mnitku58@yahoo.com**

**KENNEDY& EGLINTON**
2 bedroom bsmt for rent. Sep.entrance, Sep. laundry & parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.473.3052**

**MORNINGSIDE & STAINES**
1 bedroom bsmt for rent. Sep.entrance, laundry & parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.330.4327**

**MORNINGSIDE & FINCH**
1 bedroom brand new bsmt with sep.entrance. Close to school & 1 min. walk to ttc.
தொடர்புகளுக்கு: **647.401.7443**

**MORNINGSIDE & SHEPPARD**
1 bedroom walk-out bsmt for rent. parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.241.2872**

**MARKHAM & STEELES**
3 bedroom newly renovated bsmt for rent. Sep. entrance, parking & laundry. Working people preferred. Avail. immediately.
**647.505.2582 / 905.471.2582**

**BIRCHMOUNT& ST.CLAIR**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & Sep. laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.882.4532**

**LESLIE & GREENLANE**
2 Bedroom walk-out bsmt for rent. Sep.entrance, parking & laundry. Close to hwy 404 (3 mins.)
தொடர்புகளுக்கு: **416.347.8805**

மேலும் பக்கங்கள் 13,14,15,16

33 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

## BASEMENT FOR RENT

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.859.7980**

## BASEMENT FOR RENT

**MARKHAM & PAINTED POST**
1 bedroom bsmt for rent. Sep. entrance & sep.laundry. Couple or ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.880.3636**

## HOUSE/BASEMENT FOR RENT

TAPSCOTT & CROWTRAIL
1 Bedroom basement for rent.
STAINES & MORNINGSIDE
2 Bedroom walkout basement for rent.
3 Bedrooms house for rent.
Contact: 647.686.8590

## BASEMENT / ROOM FOR RENT

MCCOWAN & SHEPPARD
2 bedroom basement for rent. Laundry, internet & parking.
Also 1 Bedroom for rent (main floor) Sep. washroom, internet & parking. Avail. January 01, 2023.
**905.294.3531/ 647.330.7482**

## APARTMENT FOR RENT

**PHARMACY & LAWRENCE**
1 Bedroom + Den apartment for rent. 3 bedroom house for rent.
தொடர்புகளுக்கு: **647.708.3444**

## BASEMENT / ROOM FOR RENT

**TAPSCOTT & CROWTRAIL**
1 bedroom basement for rent. Laundry & parking. Family or couple or group of students preferred. Avail. immediately. Also 1 room Avail. in mainfloor.
தொடர்புகளுக்கு: 647.261.3482

## ROOM FOR RENT

**BRIMLEY & STEELES**
1 Bedroom for rent. Sep. entrance, parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.786.5816**

**NEILSON & MCLEVIN**
1 Room for rent in a basement. Laundry. Close to all facilties. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.766.7779**

**WARDEN & ELLESMERE**
One room for rent in a bsmt. Male preferred. Close to all facilties. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **647.808.0406**

**MIDLAND & EGLINON**
2 Bedrooms for rent in a house. Students / female preferred. Close to all facilities. Avail. January 15, 2023.
தொடர்புகளுக்கு: **647.657.8776**

**TAUNTON & BURKHOLDER**
1 Bedroom for rent in a new house - upstaris. Close to all facilities. Avail. January 01, 2023.
**647.203.8774/647.467.1622**

**OSHAWA**
Room for Rent in Oshawa. Only for Female tenant. Close to all amenities.
தொடர்புகளுக்கு: **416.731.3314**

**NEILSON & SHEPPARD**
Room for rent. Female preferred. Avail. immediately.
**416.875.4257 / 647.444.7218**

**MORNINGSIDE & FINCH**
Single room for rent in a house. Ladies preferred. Close to all facilties. Avail. February 01, 2023.
தொடர்புகளுக்கு: **416.669.9254**

**BRIMLEY & EGLINTON**
Bedroom for rent in a bsmt. Sep. entrance.Working female or student preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.238.9061**

## HOUSE FOR RENT

**NEILSON & FINCH**
3 bedroom house for rent. Parking & laundry. Close to TTC & all the facilities. Avail. February 01, 2023.
தொடர்புகளுக்கு: **647.628.6991**

**MARKHAM & STEELES**
4 bedroom & 2 livingroom house for rent. 3 washrooms & 2 parking. Avail. February 01, 2023.
தொடர்புகளுக்கு: **416. 662.1529**

## ROOM FOR RENT

**MIDLAND & EGLINTON**
1 bedroom for rent in a two bedroom bsmt, with or without food. Sep.entrance, parking, internet & laundry. Male preferred. Avail. January 01, 2023.
**416.220.3003 / 416.554.0759**

## ROOM FOR RENT

**WARDEN & FINCH**
1 bedroom for rent. Rent & Utilities included. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **437.929.6639**

## HOUSE/ BASEMENT FOR RENT

**MEDOWALE & SHEPPARD**
4 bedroom house for rent. **Also** 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all the facilities. Available immediately.
**647.999.5420/ 647.654.8468**

## ROOM RENT FOR SENIORS

**KENNEDY & ELLESMERE**
**Room for rent with food. Ladies preferred.** முதியோருக்கு 24 மணி நேர பராமரிப்பு மற்றும் சுடச்சுட உணவு இலங்கை முறைப்படி சமைத்து வழங்கப்படும்.
**416.855.7048 / 647.710.2601**

## HOUSE FOR RENT

**NEILSON & SHEPPARD**
3 Bedroom & 2.5 washrooms house for rent. Close to all the facilities. No pets & no smoking. Avail. January 01, 2023.
தொடர்புகளுக்கு: **647.390.8269**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## BASEMENT FOR RENT
**SHEPPARD& MIDLAND**
1Bedroom bsmt for rent. Parking & laundry. Close to TTC, Go train & Agincourt mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.266.4789**

## ROOM FOR RENT
**MCCOWAN & FINCH**
1 Room Available in a 3 bedrooms bsmt. Shared kitchen.Close to TTC & all facilities. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.825.0566

## HOUSE / BASEMENT FOR RENT
**HARMONY & HWY 401 (OSHAWA)**
Newly renovated 3 bedroom house for rent. 2 full washrooms, Parking & laundry . **Also** It has 3 bedroom walk-out bsmt with 2 full washrooms for rent. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.553.6799**

## BASEMENT FOR RENT
**HARMONY RD. & TAUNTON**
Newly renovated 2 bedroom walkout bsmt for rent. Parking and free wifi. Minutes to Durham college.Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.504.2924**

## HOUSE FOR RENT
**MARKHAM & HIGHGLEN**
4 bedroom house for rent. Parking. Close to all facilities. Avail. immediately.
**SOLINA RD & HWY 401**
3 bedroom full house with 4 parking spots for rent (2 acres) in Carlington,Oshawa. Avail. immediately
தொடர்புகளுக்கு: **416.201.1222**

## BASEMENT / ROOMS FOR RENT
**MARKHAM & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Utilities & internet included. Couple preferred. Avail. March 01, 2023.
**MARKHAM & 14 TH AVENUE**
**2 bedrooms** available for rent in a 3 bedroom bsmt. All inclusive rooms. Students or single male preferred. Avail. February 15, 2023.
தொடர்புகளுக்கு: **647.666.6403**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & FINCH**
2 Bedroom brand new bsmt for rent Laundry & 2 parking. Couple / students/ family preferred. Close to TTC, Eraa supermarket & all facilities. Avail. immediately.
**647.781.4266 / 647.914.7245**

## HOUSE FOR RENT
**ROSSBANK & SHEPPARD (PICKERING)**
3 Bedroom semi detached house for rent. Close to all the facilities. Avail. January 01, 2023.
தொடர்புகளுக்கு: **647.233.6892**

## BASEMENT/ROOM FOR RENT
**MARKHAM & DENISON**
1 Bedroom basement for rent. Sep. entrance, parking & Sep. laundry. No smoke / no alcohol & no pets. Rent $10,00.00 / month, including utilities. 2 Females or couple preferred. Avail. January 01, 2023. Individual Rooms available. Single or Couple Preferred.
தொடர்புகளுக்கு: **647.507.2148 / 647.864.1051**

## HOUSE FOR RENT
**HWY 7 & DONALD COUSEN PKWY**
2 bedroom 1 washroom Coach Home for rent. Parking. Close to HWY 407, GO Station & other facilities. Avail. January 01, 2023.
தொடர்புகளுக்கு: **647.862.7056**

## COOK WANTED
**SPORTS BAR** ஒன்றிற்கு அனுபவமுள்ள **COOK** ஒருவர் தேவை. தொடர்புகளுக்கு:
**416.889.3191**
**647.667.0482**

## ROOMS FOR RENT
**MORNINGSIDE & SEWLLES**
Multiple bedrooms available with bathroom & kitchen.
தனித்தனி அறைகளாகவும் கொடுக்கப்படும். Close to TTC (2 Buses).
Contact owner about renting price.
தொடர்புகளுக்கு: **416.908.9494**

## HELP WANTED
வீட்டில் சமையல் மற்றும் துப்பரவு செய்தல் போன்ற வேலைகளிற்கு பெண் பணியாளர் ஒருவர் தேவை.
வேலை நாட்கள்:
திங்கள் முதல் வெள்ளி வரை.
தொடர்புகளுக்கு: **416.571.7486**

## மணமகள் தேவை
1982ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பூராடம் நட்சத்திரத்தில் பிறந்த கனடாவில் டிப்ளோமா படித்து சொந்தமாக தொழில் புரியும் மணமகனுக்கு கனடாவில் மணமகள் தேவை. விவாகரத்து ஆனவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
**NO BROKERS PLEASE**.
தொடர்புகளுக்கு: **416.809.9786**

## HOUSE FOR RENT
MORNINGSIDE & NIGHTSTAR
2 Bedroom detached house main floor for rent. 3 washrooms, 3 parking , Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.509.7247**

## முதியோர் பராமரிப்பு
முதியோருக்கு 24 மணி நேர பராமரிப்பு மற்றும் சுடச்சுட உணவு இலங்கை முறைப்படி சமைத்து வழங்கப்படும். நீண்ட கால குறுகிய கால பராமரிப்பு வசதி வழங்கப்படும்.
**647.512.9820/647.868.2440**

## CATERING SERVICE
உங்கள் **holiday parties** இற்குத் தேவையான சகலவிதமான இலங்கை, இந்திய உணவு வகைகளுக்கு **ROSSLAND & GARDEN** இல் அமைந்துள்ள **HOOKSEYS's Catering service** இனை அழையுங்கள் **437.778.4482**
**For big orders please call 24 hrs in advance.**

## வேலைக்கு ஆட்கள் தேவை
Line cook, Breakfast cook needed for a busy restaurant - Oak Side Bar & Lounge, in Markham / Stouffville.
Immediate positions available. Line cook, Breakfast cook போன்ற வேலைகளிற்கு அனுபவமுள்ள ஆட்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் மற்றும் சலுகைகள் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு: **647.406.2405**

## CAR FOR SALE
Used car for sale - 2019. BMW - 430i - X Drive Gran coupe
76 KM Same owner. For more information
Email to **Vlambaram@sympatico.ca**

## வேலைக்கு ஆட்கள் தேவை
**GERRARD & COXWELL** ல் அமைந்துள்ள Canadian Restaurant ஒன்றிற்கு
**Chef, line Cook & Breakfast cook Wanted immediately.**
**FULL TIME / PART TIME JOB AVAILABLE.**
Line Cook,Chef & Breakfast cook போன்ற வேலைகளிற்கு அனுபவமுள்ள ஆட்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் மற்றும் சலுகைகள் பேசித் தீர்மானிக்கலாம்.
Call : **416.220.9179**
Email: chadsenagroup@gmail.com

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: 416.880.5952

## வாடகைக்கு

4 BR, 3 BR, 2 BR, 1 BR
House, Condo, Basement
வாடகைக்கு உள்ளது.

அழையுங்கள்- 647.861.8240

## RENOVATION

- *Plumbing* • *Painting* • *Electric* • *Tiles*
- *Basement* • *Hardwood* • *Laminating*
- *Kitchen* • *Landscaping* • *Interlock*

ஆகிய வேலைகள் செய்துகொடுக்கப்படும். அழையுங்கள்

***Dinesh: 647.625.2239 / drsharvin15@gmail.com***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 12, 13, 15, 16

## யோக சோதிடம்

கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

## தெய்வீகம்

சர்வதேச ஆன்மிக சஞ்சிகை
நடத்தும்
ஆன்மிக மாநாடு

### ஆய்வுக் கட்டுரை கோரல்

எதிர்வரும் 08.01.2023 யாழ்ப்பாணம் நல்லூர் மயிலூரான் அரங்கில் நடைபெறவுள்ள ஆன்மிக மாநாட்டின் ஆய்வரங்க நிகழ்வுக்கு ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பிக்க விரும்புகின்ற அறிஞர்கள் தெய்வீகத்தை நோக்கிய ஆன்மீகம் என்னும் தலைப்பிற்கு அமைவாக ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்கமுடியும். ஆய்வுக் கட்டுரைகளை 1.1.2023க்கு முன்பாக நேரடியாகவோ அல்லது padmanaban73@gmail.com ஊடாகவோ சமர்ப்பிக்கலாம்.

ஆய்வரங்கத் தலைவர்
பிரம்மஸ்ரீ.ச.பத்மநாபன்
பீடாதிபதி
இந்து கற்கைகள் பீடம்
யாழ் பல்கலைக்கழகம்.

# AZ DRIVER WANTED



Hiring AZ Drivers for short haul. Keep you busy year Round 60-70 hrs/week. Paying top $$ Hourly & per miles plus HST. Come home every day. Paying weekly direct deposit. Requirement Must have proof of experience minimum of 3 years as a AZ Diver Clean driving record. Able to cross border Canada/USA. Need to have Canadian passport/ Fast card or US Visa. If you have interest in this position and meet the stated requirement.

***Please submit your resume and drivers abstract or***
***Call Raj @ 905-297-8985 Ext. 101***
***Email: Info@casritransport.com***
***Fax: 905-390.3016***

## NS HOME RENOVATION

- Tile
- Kitchen
- Plumbing
- Hardwood
- Laminating
- Basement Renovation
- Steps Replacement
- Heating & Cooling
- Electric (Pot Lights)
- Hot Water Tanks - Replacement



குறித்த நேரத்தில் வேலைகள் முடித்துக் கொடுக்கப்படும்.

**Please Call: Sharan - 416.829.3232**

Property Management
Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

Available for Rent
Richmond Hill – Yonge St & Elgin Mills Rd– Large Furnished Room
(1Bedroom +1 Parking included internet and Utility) [800/m]
Richmond Hill – Yonge St & Elgin Mills Rd– Furnished Room in 2nd Floor
(1Bedroom + included internet and Utility) [500/m] ** Female only
Markham –Markham / Steeles – Detached
(3 + 1Brm+4 Bath) [$3, 450/m]
Beaverton – Simcoe Rd / Mara Rd - Detached
(4Brm + 3Bath ) [$2,450/m]
Etobicoke – Dundas St W & Kipling Ave –Condo
(1Brm + Den & 1Bath + 1 Parking) [$2,500/m]
Amherstview (Close to Kingston) – Detached
(4 Brm + 3Bath) [$2695/m]
Ajax –Salem Rd/ Rossland Rd- Bsmt
(2+1Brm + 1Bath) [$2,000/m]

Available for Rent
Trenton – Hwy 2/ 2nd Dug Hill– Detached
(3+2Brm +3Bath) [$3,000/m]
Ajax– Salem Rd & Rossland - Detached – Main
(5Brm + 4Bath) [$3,250/m]
Scarborough – Mcnicoll & Brimley – Detached Bsmt
(1Brm +1 Bath) [$1,000/m]
Pickering - Twyn Rivers& Altona Rd– Detached - Bsmt
(2Brm+2Bath) [$1,900/m]
Scarborough - Bellamy & Eglinton – Bungalow – Main
(3Brm +1Bath) [$3,200/m]
Scarborough–Lawson Rd & Centennial – Main
(2Brm +1Bath) [$2,400/m]
Scarborough– Sheppard & Warden – Condo
(1 Brm +1Bath) [$2,550/m]

BUY / SELL/ LEASE / INVEST

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களை எப்படி தேர்ந்தெடுத்துக் கொடுப்பது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வாழ்ந்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

Real Estate & Property Management துறையில் எனது 32 வருட அனுபவம் உங்களுக்குக் கைகொடுக்கும்.

கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999

We are managing Condos, Houses, Apartments in the area of
Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.

# நித்தம் ஒரு வானம் - திரைவிமர்சனம்




நித்தம் ஒரு வானம் படத்தின் கதாநாயகன் அர்ஜுன் (அசோக் செல்வன்) தனது பெற்றோருடன் வாழ்ந்து வருகிறார். கதைப் புத்தகங்களை வாசிக்க விரும்பும் இவரது வாழ்க்கை வேலையும், வீடுமாகச் செல்கிறது. அர்ஜுன் தான் வாசிக்கும் கதைகளில் தன்னைக் கதாநாயகனாகக் கற்பனை செய்யும் பழக்கமுடையவர்.



அவரது வாழ்க்கை இப்படிச் செல்லுகையில், அர்ஜுனின் பெற்றோர் அவரை ஜனனி (Vinsu Rachel) என்ற பெண்ணுடன் திருமணம் செய்ய நிச்சயிக்கின்றனர். மற்றப் பெண்களுடன் பெரிதாகப் பழகாத அர்ஜுன் ஜனனியுடன் நன்றாகப் பழகுகிறார். இவ்வாறு பழகுவதால் இருவரும் தமது வாழ்க்கையைப் பற்றி விபரமாகக் கதைக்கின்றனர்.

இதன் விளைவாக ஜனனி தான் பிழையான காரணத்திற்காக இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதித்தார் எனப் புரிந்து கொண்டு அர்ஜுனை விட்டு விலகுகிறார்.
இதனால் ஒரு தவறும் செய்யாத அர்ஜுன் மிகவும் மனக்கஷ்டம் அடைகிறார். இதையும், அவர் பிறருடன் பழகாத தன்மையையும் மாற்ற அர்ஜுனின் குடும்ப வைத்தியர் ஒரு திட்டம் வகுக்கிறார்.
அந்தத் திட்டம் மூலம் அர்ஜுன் இந்தியாவின் மறுபக்கத்திற்குச் சென்று புதியவர்களைச் சந்திக்கிறார்.



அர்ஜுனின் குடும்ப வைத்தியரின் திட்டம் என்ன? எங்கும் செல்ல விரும்பாத அர்ஜுன் ஏன் வேறு மாநிலங்களுக்குச் செல்கிறார்? அவரது மனமும் பழக்கமும் மாறுமா? என்ற கேள்விகளுக்குப் பதிலை இப்படத்தைப் பார்த்து அறியுங்கள்.
இப்படம் மிக எளிதாகவும், சாதாரணமாகவும் செல்கிறது. ஆனால், அர்ஜுனைப் பயணிக்கத் தூண்டிய நிகழ்வால் படம் விறுவிறுப்பாக மாறுகிறது. இயக்குநர் தான் கூறவந்த கருத்தை கதாபாத்திரங்களின் இயற்கையான செயல்கள் மூலம் காட்டுகிறார். இதனால் படத்தின் பெண் கதாபாத்திரங்களில் இருவரான சுபத்திரா (ரீத்து வர்மா) மற்றும் மதி (அபர்ணா பாலமுரளி) நன்றாகவும் இயல்பாகவும் நடித்துள்ளனர். இப்படத்தின் கதை அமைப்பால், இதில் பல பெண்களுக்கு நடிக்க வாய்ப்பு கிடைத்தது குறிப்பிடத்தக்கது. இவர்கள் அனைவரும் காதலுக்காகவோ, சோகத்துக்காகவோ மட்டும் கதையில் சேர்க்கப்படவில்லை.

அர்ஜுன் சிலர் படும் கஷ்டங்களை நேரில் காணுவதன் மூலம் தான் அனுபவித்த அநியாயத்தை எளிதில் தாண்ட முடியும் என்று உணர்கிறார்.

நல்ல கருத்துகளும், இயற்கைக் காட்சிகளும், சிறப்பான நடிப்பும் மற்றும் நல்ல கதை அமைப்பும் கொண்ட இப்படத்தை அனைவரும் பார்த்து மகிழலாம்.



# படப்பிடிப்பு...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

கல்யாணத்துக்காக போயிருந்தபோது என்னைச் சுற்றி 50 பேர் கூடிவிட்டனர்.

என்னோடு 'தம் படம்' எடுக்கிறேன் என்ற பெயரில் என்னையே மல்லுகட்டுகிறார்கள். இம்மாதிரியான அன்புத் தொல்லைகள் நிறைய இருக்கிறது. சிலநேரம் கோபம் வந்தாலும் இது எத்தனை பேருக்கு வாய்க்கும். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் தமிழர்கள் என்னைப் பார்த்தால் அன்பை பொழிகிறார்கள். திரைத்துறை மூலமாக மக்கள் என் மீது செலுத்தும் அன்பு பிரமிக்க வைக்கிறது.



**'மதயானைக் கூட்டம்' தொடங்கி 'கொம்பன்', 'பாயும் புலி', 'ரஜினி முருகன்' 'சேதுபதி' என்று தொடர்ந்து நீங்கள் நடித்த எல்லா படங்களிலுமே அந்தந்த கதாபாத்திரத்தை அப்படியே உரித்து வைக்கிறீர்கள். இயல்பான நடிப்பு எப்படி உங்களுக்கு சாத்தியமாகிறது?**

என்னுடைய கதைகள் புனைவற்ற கதைகள். மக்களின் வாழ்க்கையை ரத்தமும் சதையுமாகப் பேசியவன் நான். நாற்பது வருடங்களில் 45 சிறுகதைகளும் சில நாவல்கள் மட்டுமே எழுதியிருக் கிறேன். மக்களின் எழுத்தை முழுக்க அதற்குள் தோய்த்து எழுதியவன். இப்போது பேசுகிற வேல ராமமூர்த்தி வேறு, எழுதும்போது இருக்கும் வேல ராமமூர்த்தி வேறு. நல்ல சிறுகதையை எழுதி முடித்ததும் படித்துவிட்டு நான்கைந்து முறை அழுவேன். அந்த திருப்தி இருந்தால்தான் அந்தக் கதையை வெளியிடுவேன். அந்தளவு என் படைப்பு களில் வரும் ஒவ்வொரு பாத்திரத்தையும் நானே வாழ்ந்துதான் எழுதியிருக்கேன். அது திரை கதாபாத்திரங்களுக்குள்ள ஊடுருவதற்கு எளிதாக இருந்தது.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் சங்க கலை இலக்கிய பிரிவிலும், அறிவொளி இயக்கத்தின் பொறுப்பாளரா கவும் இருந்தபோது தமிழ்நாடு முழுக்க வீதி நாடகங்கள் போட்டிருக்கிறோம். அப்போது எழுத்துடன் நாடக அனுபவமும் சேர்ந்தது. தமிழ்நாட்டில் முதன்முதலில் மேடையில் கதை சொல்லும் பழக்கத்தை நான்தான் ஆரம்பித்து வைத்தேன். இன்றைய பிரபல கதை சொல்லி பவா செல்லத்துரையும் அதை பதிவு செய்துள்ளார். நான் மேடை ஏறி கதை சொன்னால் கண் இமைக்காமல் பார்ப்பார்கள். நான் சிரித்தால் சிரிப்பார்கள் நான் அழுதால் அழுவார்கள். இப்படி எழுத்துக்கு உண்மையா இருந்த மாதிரி நடிப்புக்கு உண்மையா இருக்கிறேன். அதுதான் என் நடிப்பில் பிரதிபலிக்கிறது. இன்னொன்று என் உடல் சார்ந்த, மண் சார்ந்த கதாபாத்திரங்கள்தான் வருகிறது. அந்தக் கதாபாத்திரங்களில் நடிக்கிறபோது என் மூதாதயரையும் முப்பாட்டன்களையும் மனதில் வைத்துக்கொள்வேன்.

**இந்த வயதிலும் இரும்பு தேகத்துடன் இருக்கீங்களே, எப்படி?**

நான் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன். கம்பஞ்சோறு, தட்டாங்காய், பருத்திக்காய், மஞ்ச நெத்தி பழம், வேப்பம் பழம் என்று காட்டில் விளையும் அத்தனையையும் தின்போம். ஏறாத மரம் இல்லை, குதிக்காத கிணறில்லை. கருவாடு, மீன், கறியென்று சாப்பிட்ட சத்தான ஆகாரம், 16 வயதில் ராணுவத்துக்கு போகிறதுக் காகப் பயிற்சி எடுத்தது எல்லாம் சேர்ந்து தான் உடம்புக்கு ஊட்டம் கொடுத்தது. இதில் ராணுவத்துக்கு போன கதை தனிக் கதை.

**அதையும் சொல்லுங்கள்?**

நான் கல்லூரி படித்த நேரம் 1968-இல் அண்ணாதுரை இறந்துபோகிறார். ஊரிலிருந்து ரயிலில் ஏறி சென்னை வந்து சுத்திக்கொண்டு ஊருக்கு போனால் கல்லூரி இறுதி தேர்வில் தோல்வி அடைந்து விட்டேன். வீட்டுக்கு தெரிந்தால் என்ன சொல்லுவார்களோ என்று நினைத்து, அன்று இரவு அம்மா வைத்திருந்த நாற்பது ரூபாய் பணத்தை எடுத்துக்கொண்டு, ஒரு மஞ்ச பையில் மேல் சட்டை, கால்சட்டையை சுருட்டி வைத்துக்கொண்டு, தூங்கிக்கொண்டிருந்த அப்பா - அம்மா காலை தொட்டு வணங்கிட்டு, வீட்டிலிருந்து நான்கு மைல் தூரம் நடந்து வந்து நானும் இன்னொரு பையனும் சென்னைக்குப் போகும் லாரியை பிடித்தோம். முன்னாடி இருக்கும் கேபினில் உட்கார்ந்தால் ஆறு ரூபாய், பின்னாடி உட்கார்ந்து வந்தால் அஞ்சு ரூபாய் என்று கிளீனர் தனித்தனியா 'ரேட்' சொன்னான். நம்மிடம்தான் காசு இருக்கே என்று கேபினுக்கே காசு கொடுத்து தாம்பரத்தில் வந்து இறங்கினோம்.

சென்னையில் ஒரு மாதம் சுத்திக்கொண்டு இருந்தேன். எனக்கு ராணுவம், காவல் துறையென்று ஏதாவது ஆடை அணிய வேண்டுமென்று ஆசை. அதனால் கடற் படைக்கு ஆள் எடுப்பதை கேள்விப்பட்டு தேர்வு நடந்த இடத்துக்கு போனேன். கூட்டம் முண்டியடிக்கிறது. அப்போது ராணுவத்துக்கு போக ஐந்தாம் வகுப்பு படித்திருந்தாலே போதும். என் கையில் பியூசி சான்றிதழ் இருக்கிறது. அதை பார்த்துவிட்டு உள்ளே இழுத்து போட்டார்கள். ஆனால், எடை பார்த்த போது தேவையான 48 கிலோவுக்கு 46 கிலோதான் இருக்கிறேன். இருந்தாலும் பியூசி படித்த இவனை விடக்கூடாதென்று நினைத்த அலுவலர், இரண்டு வாழைப் பழம் சாப்பிடச்சொல்லி, தண்ணீர் குடிக்க அவரே குழாயைத் திறந்துவிட்டார். ம்ஹூம் அப்படியும் போதுமான எடை வரவில்லை. எப்படியோ தேர்வு செய்துவிட்டார்கள். ராணுவத்தில் சேர்ந்து ஒரு மாதம் கழித்துதான் வீட்டுக்கு கடிதம் போட்டேன். அதைப் பார்த்துவிட்டு பொழுதுக்கும் அம்மா அழுதுகொண்டு இருந்ததாக அப்புறமா தெரிய வந்தது. 5 வருஷம் மட்டும் சேவை செய்துவிட்டு எழுதி கொடுத்துவிட்டு வந்துவிட்டேன். ஊருக்கு வந்ததும் தபால் அலுவலகத்தில் வேலை கிடைத்தது. தொழிற் சங்கத்தில் இருந்த என்னைத் தேடி வந்து நிறையப் பேர் பார்ப்பார்கள். அலுவலகத்துக்கு எதிரியிலேயே டீ கடை. பாதி சம்பளம் டீக்கே போய்விடும். அப்போதுதான் எழுத ஆரம்பித்தேன். இப்போது நடிகனாக உங்கள் முன் பேட்டி கொடுத்துக்கொண்டு இருக்கிறேன். இதுதான் நமது வரலாறு.

**'கிடாரி'யில் உடம்பு முழுவதும் எண்ணெய் தேய்த்தபடி கோவணத்துடன் நடந்து வரும் காட்சியில் நடித்தது பற்றி?**

இந்தக் காட்சியில் நான் நடிப்பேனா என்ற சந்தேகத்துடன்தான் இயக்குநர் பிரசாத் முருகேசன் தயங்கித் தயங்கி சொன்னார். இது எனக்குக் கிடைத்த இரையென்று நினைத்து நடிக்கத் தயாராக ஆகிட்டேன். அந்தக் காட்சியில் நான் உருவிக்கொண்டு வரும் வேல் கம்பு அசல். அதனால் மனைவி, மருமகள் கதாபாத்திரத்தில் நடித்தவர்கள் எங்கே நமது மேல் குத்து பட்டுவிடுமோ என்று நினைத்து பயந்தனர். நமது ஆதி வாழ்க்கையே மிருக வாழ்க்கையும் வேட்டை வாழ்க்கையும் தானே. அந்த காட்சியில் நடித்தபோது 'அனிமல் பிளானெட் சேனலில்' வரும் மிருகங்களைத்தான் நினைத்துக் கொண்டேன். நடிக்கும்போதே, "சிங்கம் கிளம்பிடுச்சு" என்று நடிகர் சசிக்குமார் பாராட்டினார்.

**இடதுசாரி இயக்க மூத்த தலைவர் நல்லகண்ணு பாத்திரத்தில் நடிப்பது பற்றி?**



'ராஜவம்சம்' கதிர்வேலு இயக்கும் படம் அது. இதுவரை நான் நடித்த எல்லா படங்களிலும் கம்பீரமாக, கொஞ்சம் வில்லத்தனமாக வருகிற மாதிரியான பாத்திரங்கள்தான் அமைந்தது. முதன் முறையாக அந்த அகங்காரத்தைக் குறைத்து, அமைதியான மனம் கொண்டவராக விரும்பி நடித்திருக்கிறேன். நல்லகண்ணு பெயரை நேரடியாகப் படத்தில் பயன்படுத்தவில்லை. என்றாலும், அந்த பாத்திரத்துக்கு ஏற்ப என் இயல்பை மாற்றி நடித்தது வித்தியாசமான அனுபவமாக இருந்தது. படப்பிடிப்பு முடிந்தும் சில நாட்கள் அந்த பாத்திரமாகவே நான் மாறியிருந்தேன். அது எனக்கே ஆச்சரியமான அனுபவம்.

**குற்றம் பரம்பரை பிரச்சினை என்னாச்சு?**

இதுபற்றி பாலா பத்திரிகையாளர்களை அழைத்து பேசிவிட்டார். எனவே, அதுபற்றி நானொரு கருத்துச்சொல்லி அது மறுபடியும் பிரச்சினையாகத் தொடர்வதை விரும்பாமல் அமைதியாக இருந்தேன். நான் எழுதிய 'குற்றப்பரம்பரை' பாலா இயக்கத்தில் படமாக வெளிவருவதற்கும், அதில் வசனம் எழுதி, நடிப்பதற்கும் ஆவலாகக் காத்திருந்தேன். பாலா அடிப்பார் என்றெல்லாம் சொன்னார்கள். என் மீது பிரியமுள்ள அவரிடம் இரண்டு பிரம்படி வாங்கிப் பார்க்கலாமே என்றும்தான் காத்திருந்தேன். ஆனால், அதனை சினிமாவாக்க எடுத்த முயற்சிகள் தள்ளிப்போனது. அதனால், இப்போது ஹாட் ஸ்டார்-இல் தொடராக எடுக்கப்படுகிறது. மொத்தம் 2 பகுதி. முதல் பகுதியில் 10 அத்தியாயம் எழுதிக் கொடுத்துவிட்டேன். அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும்.















# இனி வரும் காலம்




அனேகமாக எல்லோருமே தங்களைத் தவிர மற்ற அனைவருமே மகிழ்ச்சியாக, நிம்மதியாக இருப்பதாகவே நினைத்துக் கொண்டிருப்பர். தாங்கள் மட்டும் பல்வேறு பிரச்சினைகளில் சிக்கிக் கொண்டு அவற்றைத் தீர்க்கும் வழிகளை சிந்தித்துக் கொண்டிருப்பதாகவும் மற்றவர்கள் எந்தப் பிரச்சினையும் இன்றி வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருப்பதாகவும் நம்புவர்.

உண்மையில் பிரச்சினைகள் இல்லாத வாழ்க்கை என்பது சாத்தியமில்லை என்பது ஒருபுறம் இருக்கட்டும். எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கக் கூடியோரும் எதிர் காலத்தை பற்றி ஒரு சிறு பயம் இருந்து கொண்டுதான் இருக்கும் என்பதை அறி வீர்களா. தாங்கள் விரும்பிய உயரத்தை அடைந்த பின்பும், தாங்கள் எதிர்பார்த்த வெற்றிகளைப் பெற்ற பின்பும் கூட, இப்போது இருப்பது போல் இனி வரும் காலம் சுகமாக இருக்குமா என ஏதாவது ஒரு கேள்வி மனதில் எழுந்து பலரையும் தங்கள் மகிழ்ச்சியை அனுபவிக்க விடாமல் செய்து கொண்டுதான் இருக்கும்.

இந்த சூழ்நிலையில், ஏதாவது ஒன்று அவர்கள் நினைத்தது போல் நடக்காமல் தவறாகப் போய் விட்டதாகத் தோன்றினால் உடனே மனம் அந்த தவறுக்காக மட்டும் வருந்தாமல் அந்தத் தவறால் ஏற்படக் கூடிய விளைவுகளையும் பயத்தோடும் பதற்றத்தோடும் கற்பனை செய்யத் தொடங்கி விடும். சிறு புள்ளியாக எழக் கூடிய அந்த எண்ணங்களை விழிப்புணர்ச் சியோடு உடனே சரி செய்யவில்லை யென்றால் அது மனமெங்கும் பரவி மனஅழுத்தத்தை ஏற்படுத்தி, உண்மை யிலேயே அவர்கள் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கி விடும்.

உதாரணத்திற்கு உங்கள் பள்ளிப் பருவத்தின் தேர்வுக் காலங்களை எண்ணிப் பாருங்கள். ஏதேனும் ஒரு தேர்வில் சரியாக எழுதவில்லை என்றால் உங்கள் மன ஓட்டம் எப்படி இருந்திருக் கும். சிலர் அதைப்பற்றிக் கவலைப்படா மல் (just like that) அதனைக் கடந்திருப்பீர் கள். பலர், இந்தத் தேர்வு சரியாக எழுத வில்லையே இதனால் அதிக மதிப்பெண் எடுக்க முடியாதே, விரும்பிய படிப்பு படிக் கும் கனவு இனி அவ்வளவு தான். ஏதோ ஒன்றைத்தான் படிக்க வேண்டி இருக்குமோ. சரியான வேலை கிடைக்குமா, எதிர்காலம் என்ன ஆகுமென்று தெரியவில்லையே என்று ஒரு முழு வாழ்க்கையையும் பற்றி அப்போதே யோசித்து பதறி தவித்திருப்பர்.



இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், நடந்து போன ஒன்றிற்காக அதிகம் கவலைப் படாமல் இலகுவாக எடுத்துக் கொண்டோரையும் அந்த எதிர்மறை சிந்தனைக்காரர்கள் விட்டுவைப்பதில்லை. ஏன் இப்படி கவலைப்படாமல் இருக்கி றாய், எப்படி உன்னால் இப்படி இருக்க முடிகிறது எனக் கவலைப்பட வேண்டிய விடயங்களை எல்லாம் அவர்களே பட்டியல் போட்டு மனதில் விதைப்பதுடன் இப்படி எதைப் பற்றியும் நினைக்காமல் பொறுப்பின்றித் திரிகிறாயே என்று கூடுதலாக ஒரு குற்றத்தையும் சுமத்தி அனுப்பி விடுவர். கவலைப்படுவது தான் பொறுப்பான செயல் என்று ஆழ் மனமும் அதை பதிவு செய்துகொண்டு பின் எதற்கெடுத்தாலும் அது கவலைப்படத் தொடங்கி விடும். அல்லது மற்றவரிடம் தான் கவலைப்படுவதாகக் காட்ட முயற்சி எடுக்கும்.

உண்மையில் ஒரே ஒரு தேர்வில் சரியாக எழுதவில்லை என்பது போன்று ஏதேனும் ஒன்று தவறாகப் போவது அனைவருக் குமே ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் நிகழக் கூடியதுதான். ஆனால் அப்படி ஒரு தவறு நிகழும்போது எழும் எதிர்மறை எண்ணத்திற்கு இடம் கொடுத்தால் அது கவலையை (anxiety) ஏற்படுத்தி விடும். அதனால் உருவாகும் கற்பனைகள், நீங்கள் செய்த சிறு தவறால், நீங்கள் தவற விட்ட ஒரு சந்தர்ப்பத்தால் உங்களுக்கு எதிர்காலமே இல்லாமல் போய்விடும் எனும் அளவு உங்களை நம்பிக்கை இழக்கச் செய்து விடும்.

தவறுகளும் தவற விட்ட சந்தர்ப்பங்களும் ஏற்படுத்தும் பாதிப்புக்களை விட அவற்றையே மீண்டும் மீண்டும் சிந்தித்து அவற்றின் விளைவுகளைப் பற்றிக் கற்பனை செய்து கவலைப்படுவது அதிகமான பாதிப்பை ஏற்படுத்தி விடும். ஏனென்றால் இந்தக் கவலை நிகழ்வுகளை மட்டுமல்லாமல் மனதையும் உடலையும் வருத்தி தன்னம்பிக்கையையும் தகர்த்து விடும். ஒன்றல்ல இரண்டல்ல உலகளவில் பதினாலுக்கு ஒருவர் என்ற வகையில் இப்படி கவலையால் பல பிரச்சினை களுக்கு ஆளாகின்றனர் என அச்சுறுத்து கின்றன ஆய்வுகள்.

நீங்கள் செய்ய நினைக்கும் ஒவ்வொரு முயற்சியும், வெற்றி பெறுமா? வெற்றி கிடைக்காவிட்டால் என்ன செய்வது என்று நினைக்கத் தொடங்கினால் அக்கவலையே உங்கள் முயற்சிகளை நீங்கள் நினைக்கும் விதத்தில் நடக்காமல் போவதற்கு வழி வகுத்து விடும்.

செய்யும் செயல்களில் ஏதாவது தவறாகப் போனால், அந்தத் தவறு என்னென்ன விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என அறிவு பூர்வமாக உங்கள் தர்க்க ரீதியான மூளை உங்களை சிந்திக்கத் தூண்டுவது மிக மிக இயல்பு. ஆனால் தர்க்க ரீதியாக இப்படி இப்படித்தான் நடக்கும் என்று நீங்கள் நினைப்பதும், நீங்கள் அடைந்திருக்கும் அறிவின் வரையறைக்கு உட்பட்ட ஒரு கற்பனைதான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். தர்க்கம் என்பதும் ஒருவருக்கொருவர், அவரவர்களின் வாழ்வியல் முறை, பெற்ற அனுபவங் களைச் சார்ந்து வேறுபடும். இப்பிரபஞ்சத் திற்கு என்று ஒரு தர்க்கம் இருக்கிறது. அது உங்கள் நேர்மறை எண்ணத்தைச் சார்ந்துள்ளது.

தவிர, உங்கள் தர்க்க ரீதியான மூளையை விட உங்கள் உணர்ச்சி மூளையும்,

> உங்களுக்கு எதைப்பற்றிப் பதட்டம், கவலை ஏற்பட்டாலும் அமைதியாக ஒரு கதிரையில் உட்கார்ந்து, கண்களை மூடி, மூச்சை உள்ளிழுத்து வெளியேற்றி முதலில் உங்கள் மனதை நிதானப்படுத் துங்கள். பின் உங்கள் கண்களை மூடி மானசீகமாக அச்செயல் நன்றாக நடந்த தாகக் கற்பனையில் ஒரு முழுமையான காட்சியாக விரிவாகப் பாருங்கள். அதாவது அந்தக் காட்சியை நீங்கள் கற்பனையில் பார்க்கக் கூடிய விதம் அது இயல்பாக நடந்தது போல் உங்கள் மனம் எண்ணக் கூடிய வகையில் இருக்க வேண்டும். இப்போது தொடர்ச்சி யாக அந்த ஒன்று நீங்கள் விரும்பியபடி நடந்தால் எழக்கூடிய நேர்மறை விளைவு களையும் காட்சிப்படுத்திப் பாருங்கள். இது ஆழ்மனதில் உங்கள் விருப்பத்தை யும் அது ஏற்படுத்தக் கூடிய விளைவை யும் ஒரு புளுபிரிண்ட்டாக பதியச்செய்து அதே வகையில் நிகழ்வுகள் இருக்கக் கூடிய சாத்தியங்களை அதிகப்படுத்தும். எல்லாவற்றையும் விட அப்படி நேர்மறை யாக மனதில் காட்சிப்படுத்தும் போது மனம் பதற்றம் நீங்கி அமைதி அடையும். அதுவே அடுத்த நல்ல நிகழ்வுக்கு வழி வகுக்கும்.

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)

### உங்கள் திறமைக்கு அதிஷ்டம் காத்திருக்கிறது

# வெல்லுங்கள் 150,000 ரூபாய்கள்!

## எழுத்தாளர் 'குரு அரவிந்தன் வாசகர் வட்டம்' நடத்தும் உலகளாவிய திறனாய்வுப் போட்டி – 2023

தமிழ் இலக்கிய உலகில் புகழ் பெற்ற எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின் தமிழ் இலக்கிய சேவையைப் பாராட்டும் முகமாகவும், வாசிப்பு, எழுத்துப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கமாகவும் இடம்பெறும் குரு அரவிந்தன் எழுதிய நாவல், சிறுகதை தொடர்பான திறனாய்வுப் போட்டி.

15 பரிசுகள், மொத்தம் 150,000 ரூபாய்கள், இலங்கை ரூபாயில் வழங்கப்படும்.

முதலாம் பரிசு இலங்கை ரூபாய்கள் _ 30,000.
இரண்டாவது பரிசு இலங்கை ரூபாய்கள் _ 25,000.
மூன்றாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 20,000.
நாலாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 15,000.
ஐந்தாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 10,000.
10 பாராட்டுப் பரிசுகள் இலங்கை ரூபாய்கள் தலா _ 5000.

குரு அரவிந்தன் அவர்களின் படைப்புக்களுக்கான திறனாய்வுப் போட்டி. குறைந்தது 2 புதினங்கள் அல்லது 4 சிறுகதைகள் பற்றி உங்களின் கருத்துரைகளைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் 5 பக்கங்களுக்குள் அல்லது 1500 சொற்களுக்கு மேற்படாமல் யூனிக்கோட் மற்றும் வேர்ட் (Unicode and Word) அச்சுப்பிரதியாக அனுப்பவும். மாணவ, மாணவிகளாயின் தனியாகக் குறிப்பிடவும். வயது வரம்பு இல்லை. ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம். பரிசுபெற்ற கட்டுரைகளைத் திருத்தி நூலாக வெளியிடும் உரிமை வாசகர் வட்டத்திற்கு உரியது.

மின்னஞ்சல் வழியாக ஆங்கிலத்தில் உங்களின் முழுப்பெயர், தெளிவான அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி, செல்போன் எண் விவரங்களோடு அனுப்பவேண்டும்.

உங்கள் திறனாய்வு எமக்குக் கிடைக்க வேண்டிய கடைசி நாள்: 31. 03. 2023

போட்டி முடிவுகள் 2023 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி இணையத்தில் வெளியிடப்படும்.
மின்னஞ்சல்: kurufanclub@gmail.com – (kurufanclub@gmail.com)
இணையம்: https://kurunovelstory.blogspot.com/
(kurunovelstory.blogspot.com)
https://canadiantamilsliterature.blogspot.com/
இந்த அறிவிப்பினை உங்களின் முகநூல் பக்கத்திலும் பகிரிக்குழுக்களிலும் (whattsapp) பகிர்ந்து உதவுங்கள். நன்றி!

சுலோச்சனா அருண்,
செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம்.




# இனிவரும்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆழ்மனதும் அதிகமான சக்தி வாய்ந்தது. ஒரு தவறு உங்கள் எதிர்காலத்தை பாதிக்காத முறையில் எப்படி சரி செய்யப்



பட வேண்டுமென நீங்கள் எதிர் பார்க்கிறீர்களோ அப்படி நடப்பதாக நினைத்துப் பாருங்கள். உங்கள் ஆழ் மனது அந்த முறையில் அந்தத் தவறை சரிசெய்வதற்கான முயற்சிகளை எடுக்கும்.

உதாரணமாக, தேர்வு சரியாக எழுத வில்லை என்ற வருத்தம் உங்கள் மனதில் சூழத் தொடங்குமுன் சட்டென்று சுதாகரித்து, நீங்கள் நல்ல மதிப்பெண்கள் தான் வாங்குவீர்கள் எல்லாம் நல்ல முறை யில் சரியாக நடக்கும் என நேர்மறையாக எண்ணத் தொடங்குங்கள்.

ஒருவேளை அப்படி நல்ல மதிப்பெண் கிடைக்கவில்லை என்றாலும் அதனால் எதிர்காலமே பாதிக்கப் போவதில்லை. வாழ்க்கை என்பது வெற்றி தோல்வி எல்லாம் சேர்ந்த ஒன்றுதான். ஒரு தோல்வி என்பது வாழ்வின் முடிவல்ல. அந்த முயற்சியின் முடிவு மட்டுமே. இன்னும் வாழ்க்கையில் செய்வதற்கும் தொடர்வதற்கும் வெற்றி அடைவதற்கும் நிறைய இருக்கிறது. எல்லாம் அனுபவ பாடம் தான் என உங்கள் மனதிற்கு நீங்களே சொல்லிக் கொள்ளுங்கள்.

ஒரு செயலை செய்யும்போது அது வெற்றி அடையுமா தோல்வி அடையுமா என நீங்களே நம்பிக்கை இல்லாமல் இருந்தால் அங்கே தோல்விக்கான சாத்தியக் கூறுகளே அதிகமாகும். அதனால் அந்த சூழல்களில் உங்கள் மனதை நீங்கள் திடப்படுத்தி உங்கள் நம்பிக்கையை அதிகப்படுத்துவதே வெற்றிக் கான சாத்தியக்கூறுகளை அதிகப்படுத்தும்.

செய்வதற்குத் தகுதியான எந்த ஒரு செயலிலும் முதல் முயற்சி தோல்வி அடைவது பொருந்திக் கொள்ளக் கூடியதே என்பதை நீங்கள் புரிந்து கொண்டால் ஒன்றை செய்யும்போது அது தவறாகிப் போனால் என்ன செய்வது என்ற பதட்டம் வராது. மாறாக அதை ஒரு மைல் கல்லாக எடுத்துக் கொண்டு இன்னும் சிறப்பாக செய்வதற்கு நம்பிக்கை எழும். வெற்றிகள் சாத்தியமாகும்.

## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

- சிவகுமார் -

## படித்தால் தானே பயன்

வீட்டுக்கு வந்த தந்தை பொருட்கள் அங்குமிங்கும் வாரி இறைந்து கிடப்பது கண்டு அம்மாவிடம் சத்தம் போட்டார். இதுதான் வீட்டை வைத்திருக்கும் அழகு? வீட்டை சுத்தமா வைத்தால்தானே லக்சுமி தங்குவா. வீட்டிலே எத்தனை பேர் இருக்கிறீர்கள். எங்கே உன் புத்திர சிகாமணி? அவனிடம் சொன்னால் கூட ஒழுங்குபடுத்த மாட்டானா? என்று கத்தி தீர்த்தார்.

சற்று நேரத்தில் மகன் வந்தான். அப்பாவின் கோபத்திற்கான காரணத்தை அறிந்தான். வேகமாக வேலை நடந்தது. பழைய பொருட்களை எல்லாம் ஓரம் கட்டினான். புதுசை ஒழுங்காக அடுக்கினான். வீடு சுத்தமானது. பழைய பேப்பர்களுடன் ஒரு பகவத்கீதை புத்தகமும் இருந்தது. அதை தந்தை பார்த்து விட்டார்.

ஏன்டா முட்டாள், நாம் உயிராய் மதிக்கும் இந்தப் புத்தகம், இதைப் போய் பழைய பேப்பரோடு சேர்த்துக்கட்டுகிறியே என்று கத்தினார்.

அப்பா நீங்க சொல்றது சரி தான். இதை நீங்களோ அம்மாவோ வீட்டிலே இருக்கும் மற்றவர்களோ ஒரு நாளாவது புரட்டிப் பார்த்ததுண்டா? படிக்காத புத்தகம் பழைய புத்தகக்கடைக்குத் தானே! என்று சொன்னதும் பகீரென்றது தந்தைக்கு. மகனின் சொல்லில் இருந்த உண்மையை உணர்ந்தார். அன்று முதல் தினமும் ஆளுக்கொரு ஸ்லோகம் படித்து விளக்கம் அறிந்து கொண்டனர்.

# கற்றலுக்கு மறதி எதிரி


சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

மறதி அல்லது ஞாபகமின்மை என்பது ஒரு தனியாளின் நினைவாற்றலில் ஏற்கனவே பாதிப்புக்கு உள்ளான ஒரு கண்கூடான இழப்பு அல்லது தகவல் மாற்றம் எனலாம். நினைவுச் சேமிப்பகத்திலிருந்து ஞாபகங்களை மீளக்கொண்டுவர முடியாத ஒரு செயன்முறை எனவும் கூறலாம். தான் அனுபவித்த, கற்றறிந்த விடயங்களை தேவைப்படும்போது மறுபடியும் நினைவுக்குக் கொண்டுவர முடியாதநிலை. ஒரு விடயத்தை மறக்காமல் மனதில் (மூளையில்) பதியப்பெற்று இருக் கின்ற அறிவிலிருந்து சரியான விபரத்தை தேவைப்படும் நேரத்தில் வெளிப்படுத்த முடியாமை. மேலும், தேவையான நேரத்தில் குறிப்பிட்ட விடயத்தை நினைவுக்குக் கொண்டுவர முடியாமல் போதலே ஞாபகமறதி எனவும் கூறலாம்.

மறதி என்பது இயல்பானதும், படிப்படியானதுமான செயன்முறையாகும். ஞாபகச் செயற்றிறன் துடிப்பான செயற்பாடுகளுடன் மூன்று நிலைகளில் தொடர்புபடுகின்றது. அவை தகவல்களைப் பெறுதல், மாற்றியமைத்தல், களஞ்சியப்படுத்தல், நினைவுக் களஞ்சியத்திலிருந்து மீட்டல் என்பனவாகும். நினைவாற்றல் பிரச்சினை மூன்று வகைப்படும். குறுகியகால நினைவாற்றல், அண்மைக்கால நினைவாற்றல், நீண்டகால நினைவாற்றல் என்பன. ஞாபகமறதி எனும் பலவீனம் இல்லாதோர் இருக்க முடியாது. ஆனால் மனிதனுக்கு மனிதன் மறதியின் அளவுகளும், தன்மைகளும், பாதிப்புக்களும் மாறுபடும். குழந்தைகளின் மூளை ஸ்ப்பொஞ்சைப் போன்றது. தங்களைச் சுற்றியுள்ள அனைத்தையும் அவர்களால் ஈர்த்து அவற்றைத் தக்க வைத்துக் கொள்ள முடியும். வயது ஏறும்போது மூளையில் பல விடயங்கள் குடியேறும். இதனால் மறதியும் குடியேறத் தவறாது. தவறுவதுமில்லை.

பொதுவாக அழுத்தம், தூக்கமின்மை மற்றும் ஹோர்மோன்கள் போன்ற பிரச்சினைகளால் மறதி ஏற்படுகிறது. புகைபிடித்தல், போதைப்பொருட்கள் பயன்படுத்தினாலும் ஞாபகசக்தியைப் பாதிக்கும். தைராய்டு சுரப்பி இயல்பு நிலையில் செயற்படவில்லை என்றாலும் ஞாபகசக்தி பாதிக்கப்படும். உணர்ச்சி ரீதியான தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டால், இயல்பற்ற முறையில் மறதி உண்டாகலாம். அழுத்தத்தை நீக்க எடுக்கும் மாத்திரைகளும், ஹோர்மோன் மாத்திரைகளும் ஞாபக மறதியை ஏற்படுத்தக்கூடியவை.

மாணவர்கள் பொதுவாக, கற்றலில் எதிர் நோக்குகின்ற அடிப்படைப் பிரச்சினையாக ஞாபக மறதி முக்கியத்துவம் பெறுகிறது. மறதி என்பது மாணவர்க்கு எதிரியாக உள்ளது. மாணவர்கள் தாமாகத் தேடிக் கொள்வதுதான் மறதி. புறக்காரணிகளின் செல்வாக்காலும் மறதி ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. மனதை தேவையற்ற விடயங்களில் ஈடுபடுத்தக்கூடாது. தேவையற்ற விடயங்களுக்கு முதன்மை அளிக்கவும் கூடாது. சிலருக்கு சினிமாச் செய்திகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் மறதிக்கு இடம் கொடுப்பதில்லை. அவர்கள் சினிமாவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதே காரணமாகும். சிலர் கற்றவற்றை விரைவில் மறக்கவும், சிலருக்கு பொறுத்த நேரத்தில் ஞாபகத்துக்குவர மறுப்பதற்கும் இவையே காரணமாகும். மாணவர்களின் மனநிலைகளில் எதிர்மறையான தாக்கங்களும், மாற்றங்களும் முனைப்புக்கொண்டு மறதி ஊடாகக் கற்றல் செயற்பாடுகளுக்குக் குந்தகம் விளைவித்து வருகின்றது. மறதிக்கு மனம் இடம் கொடுக்காது, மனம் கற்றலுக்கு இசைந்து கொடுக்கக்கூடிய மறதியற்ற சூழல் மனதில் தோற்றம் பெற வேண்டும்.



பலரையும் பாதிக்கும் பிரச்சினை ஞாபக மறதி. சரியான காரணத்தைக் கண்டறிந்து சரிசெய்தால் விடுபடலாம் என்கிறார் உளவியல் நிபுணர் தேவிப்பிரியா. நேரத்தை திட்டமிடாமையால் பதற்றப்பட்டு மறதியை நாடுகின்றோம். இதிலிருந்து விடுபட நேரமுகாமைத்துவம் மிகவும் முக்கியம். மறதிக்கு இன்னொரு காரணம் கவனச் சிதறல். இதனால் முக்கிய விடயங்கள் நினைவில் பதியாமல் போகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளை ஒரே சமயத்தில் செய்ய முனையக்கூடாது. ஒரு சமயத்தில் ஒரு வேலையில் முழுக்கவனத்தையும் செலுத்த வேண்டும். நேரத்தையும், வேலையையும் திட்டமிடுதல், மனநிலையை உற்சாகமாக வைத்திருத்தல், கவலைகளைத் தேக்கி வைக்காதிருத்தல், சத்தான உணவு, உடற்பயிற்சி, மூளை சோர்ந்துவிடாமல் கவனித்துக் கொள்ளல், மூளைக்குப் பயிற்சி அளித்தல், மறக்கும் விடயங்களை திரும்பத் திரும்ப நினைவுக்குக் கொண்டு வருதல், மனதை இலேசாக வைத்திருத்தல், புரிந்துகொண்ட விடயங்கள் மனதில் இலேசாகப் பதியும், மனதை விழிப்பு நிலையில் வைத்திருத்தல், தேவையை அவசியத்தை நன்றாக உணர்தல், ஒரு விடயம் பதியப்பட்டவற்றை புதுப்பித்து ஒழுங்கமைப்பதன் மூலம் மறதியை விடுவிக்கலாம். நாம் கற்கும் தரவுகளை முறைப்படி தொகுக்காவிட்டால் தேவையானபோது வெளியே எடுப்பது கடினம். நினைவாற்றலை பயிற்சியாலும், முயற்சியாலும் வளர்த்துக்கொள்ள முடியும்.

மாணவர்கள் கற்றலை பயனுறுதியாக்கிக் கொள்ள, அதிக வினைத்திறனைப் பெற்றுக் கொள்ள எதிரியான மறதியை தூர விலக்கிக்கொள்ள வேண்டும். மறதியால் கற்றலில் இடர்படும் மாணவர்கள் கட்டாயம் ஒழுங்கான கற்றல் முறையைப் பின்பற்ற வேண்டும். கற்றவற்றை மீட்டுப் பார்த்தல், குறிப்பெடுத்தல், கற்றவற்றை கற்றவர்களுடன் கலந்துரையாடல், கற்றவற்றை தாமதமாக சொல்லிப் பார்த்தல், விரிவாகக் கற்றல், மேலோட்டமான கற்றலைத் தவிர்த்தல் இவற்றைப் பின்பற்றுவதன் மூலம் கற்றவற்றை மறக்காதிருக்க முடியும். நூலகங்களில் எமக்குத் தேவையான நூல்களை எவ்வளவு இலகுவாக எம்மால் எடுக்க முடிகின்றது. இதற்குக் காரணம், அவை ஓர் ஒழுங்கு முறையில் அடுக்கி வைக்கப்பட்டவையே ஆகும். இதற்கேற்ப நாமும் ஓர் ஒழுங்கு முறையில் கற்போமாயின் பரீட்சையின் போதுகூட விடையளிப்பதில் மறதி குறுக்கிடாது. கடும் பயிற்சிகள், கூடிய மனனம் இவை மூலமும் மறதியை விரட்டலாம். மறதி தொடர்பாக மாணவர்கள் சிந்தித்து செயற்படுவது போதாது. எந்த விடயம் கூடுதலாக மறக்கப்படுகிறதோ அந்த விடயத்தில் கூடுதலான அக்கறை செலுத்தப்பட வேண்டும். அக்கறைக்கும் மறதிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. உதாரணமாக, கடன் கொடுத்தவன் மறக்க மாட்டான். ஆனால் கடன் பெற்றவன் மறக்கலாம். எனவேதான் இன்று கடன் பெற்றோர் மறதியால் நிம்மதியாக வாழ்கின்றனர். இவர்களுக்கு மட்டும் மறதியால் நிம்மதி உண்டு. மாணவர்கள் மனம் கொண்டு கற்க வேண்டும். பாடத்துடன், பாட அலகுடன் ஒன்றித்துக் கற்க வேண்டும். தன்னம்பிக்கையுடன் நன்றாக மனதில் பதியும்வரை பாடத்தை விரும்பி நேசித்துக் கற்க வேண்டும். மனதைக் கற்றலில் ஒப்படைக்க வேண்டும். அகம் மாறினால் புறம் மாறும். இது உளவியல் உண்மை. மறதியிலிருந்து விடுபட சுய கட்டுப்பாடு அவசியம். சுய கட்டுப்பாட்டின் மூலம் உணர்வுகளை எமது கட்டுப்பாட்டில் வைத்திருந்து கற்றலுக்கான சரியான திசையில் செல்ல வேண்டும். இவ்வாறு செல்வோரின் எண்ணிக்கை குறைவு. அதனால்தான் சில நாடுகளில் கற்றோர் வீதம் குறைவாக உள்ளது. மாணவர்கள் மேற்கூறிய விடயங்களில் கூடிய கவனம் செலுத்தித் தங்கள் கற்றல் வெளியீட்டை மேலும் அதிகரித்துக் கொள்ளலாம்.

"ஒரு நூல் முழுவதையும் வேகமாகப் படிப்பதைவிட ஒரு பக்கத்தை நன்றாகப் படித்து உணர்வது மேலாகும்" என மெக்கவோ என்பவர் கூறியுள்ளார். பாட அலகு ரீதியான பின்னூட்டல்கள், முன்னூட்டல்கள் தேவையானவிடத்து வழங்கப்பட வேண்டும். கற்றல் வளங்களை கற்பித்தலுக்குப் பொருத்தமான இடங்களில் பிரயோகிக்க வேண்டும். கேட்பதைவிட, பார்த்துக் கற்றல் விடயங்களை மறக்காது நினைவில் வைத்துக்கொள்ள இலகுவாக இருக்கும். கறுப்பு திராட்சை விதைகளில் புரோஆன்தோசயடின் 80% உள்ளது. இந்தச் சத்தின்மூலம் நினைவாற்றல் மேலும் வளர்கிறது. அறிவிலும், ஆக்கத்திலும் திகழ்ந்த எம் முன்னோர் கறிவேப்பிலையின் பயனை அறிந்தே அதைச் சமயலுக்குப் பயன்படுத்தினர். இதை நாம், உணவு உண்ணும்போது தவிர்க்காமல் சேர்த்து உண்பதால் ஞாபக சக்தி தூண்டப்படுகிறது. இவற்றினால் கல்வியை மேம்படுத்த முடியும். மறதியால் அதிக மாணவர்கள் கல்வியில் பின்னடைவைச் சந்திக்கின்றனர். கற்றலில் மாணவர்களுக்கு எதிரியாகவுள்ள மறதியை விரட்டி கல்விப் பின்னடைவிலிருந்து மீளுவோமாக.

# கடல் தின்ற வியர்வை



'பட பட பட பட
சட சட சட சட'
என்ற பெரும் சத்தத்துடன்
கடற்படையினர் சுடுகலன்களை சரளமாக
இயக்கியபடி
மீன்பிடி வள்ளங்களை நோக்கியவாறு
முன்னோக்கியபோது ஆழிக்கடல்
சிவப்படைந்தது.

'தொப் தொப்' எனப்பல மீனவர்கள்
மீன்பிடி வள்ளங்களிலிருந்து வேகமாகக்
கடலில் குதித்து மூச்சை அடக்கியவாறு
நீரில் மூழ்கிக் கிடந்தனர்.

தமது வெற்றுத் தலைகளை
நீர் மட்டத்தின்மேல் உயர்த்தாமல்
ஆமைபோல்
கைகளால் நீரை வலித்து வலித்துக்
கொண்டே உயிரை மனதில் தாங்கியபடி
உறவுகளை இதயத்தினுள் ஏந்தியவாறு
கடற்கரைத் திசை நோக்கி நீந்தினர்

வள்ளங்கள்மீது அம்பு மழைபோல்
சுட்டுத்தள்ளிய கடற்படையின் கடுங்
கோபத்தால் வண்டு துளைத்த தாமரை
இலைபோல் மீனவப் படகுகள் கடலில்
தத்தளித்தன

வள்ளத்தினுள் பதுங்கி ஒழித்திருந்த
மீனவர்களின் உடல்களைக் குண்டு
துளைத்து மண்டைகள் சிதறி மூளை
வெளியேறி மனித உழைப்பு இரத்த
வெள்ளத்தில்;

உப்புநீரைக் குடித்துக் குடித்து
மூச்செறிந்து களைத்தவாறு நீந்திக்
கொண்டு எஞ்சிய ஏனைய
பிழைப்பாளிகள் சோர்வு நிலையில் கரை
சேர்ந்தனர்

கடல்மீனை எதிர்பார்த்துப் பசிபோக்கக்
காத்திருந்த மனைவி மக்கள் உறவினர்
தந்தை தாய்மாரின் கண்ணீரால்
உயர்ந்து சென்றது
ஆழியின் நீர்மட்டம்.



முத்துராஜா

RENT | BUY | SELL | INVEST | LEASE

# In CANADA from anywhere in the world

- Respectable Real Estate Brokerage based in Toronto
- Over 20 Years in the business
- Over 150 Sales Representatives.
- Brokers combined experience over 50 Years
- Well connected with Builders, Developers, Mortgage Brokers, Home Inspectors, Insurers ....



*For*
*more information*
*Feel Free*
*to call or*
*visit to*
*www.hlgtarealty.com*



HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc. Brokerage***

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

**Tel: 416-321-6969** * Independently owned and operated.